ஐப்பசி – கார்த்திகை 92

விலை : 12.00 ரூபா

# வாழ்க்கை

சிறப்பாசிரியர்: புலவர் ஈழத்துச் சிவானந்தன்

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்றம்
17-2-1993
யாழ்ப்பாணம்
Nallur Branch Library



'வாழ்க்கை' இதழ் வெளியீட்டு விழாவில் சிறப்புப்பிரதிகளைப் பெற்றுக் கொண்ட பெண்மணிகள்.

இது ஒரு குடும்ப இங்கிதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைக்கு வேண்டும்

இரண்டு!

உடல் ஆரோகியத்திற்குச் சோயா உணவு
மன ஆரோக்கியத்திற்குச் சுகமான சிந்தனைகள்

சோயா உணவுக்கு K. S. SOYA FOODS
சுகமான சிந்தனைக்கு ''வாழ்க்கை'' சஞ்சிகை

சோயா பதார்த்தம் பக்குவம்
வாழ்க்கை யதார்த்தம் சத்தியம

# K. S. Soya Foods

Dealers in Plenty Canada Products

*49/1, Galle Road,*
*Colombo-4.*

Phone: 584570

மனைகள் தோறும் மங்கலம் தங்க வெங்கலம் விளங்குக!

மனவளம் ஓங்க **'வா ழ் க் கை'** வருக!

# Rajah Trading Company

General Merchants, Dealers Aluminium, Eversilver, Plastic, Enamel & Glasses

**50, Dam Street,**
**COLOMBO-12.**

T'phone: 2 6 9 0 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் மாநகராட்சி மன்று 17-2-1998

# வாழ்க்கை

## வாழ்க்கை விளக்கம்

ஒரு குடும்பத்தில் அமைதியும் அன்பும் தவழ்ந்து அக் குடும்ப அங்கத்தவர்களுக்குள் ஒற்றுமையும் கட்டுக்கோப்பும் உண்டாகி; எந்தக் காரியத்திலும் நீதியும் நியாயமும் மதிக்கப்படும் போதே அக்குடும்பம் சமுதாயத்தால் கணிக்கப்படுகின்றது.

அந்தக்குடும்பத்தின் பெரியோர்களும் இளையோர்களும் ஒழுங்கானவர்கள் முறையானவர்கள் என்ற அபிப்பிராயம் பிறரிடத்தில் பரவியதும் குறித்த குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாகப் பாராட்டப்படுகின்றது. எந்த நிலையிலும் குழப்பமோ பிரிவினையோ இல்லாது அக் குடும்பம் ஆல்போல தழைத்து நிமிர்ந்து நிற்கும்.

அந்த நிமிர்வுக்குக் காரணமான பக்தி பண்பு பணிவு துணிவு முதலியவை ஒரு பாரம் பரியப் பெறுமானமாய் விளங்கும். இந்த விளக்கத்தின் வெளிச்சத்திலேயே பலருடைய பின்பற்றல்கள் தொடங்கும் வாழையடிவாழை, வரம்புநெறி ஒழுங்கு என்னும் அம்சங்கள் துளிர்த்து ஓர் இறுக்கமும் இங்கிதமும் இணைந்த சமுதாயம் மலர வாய்ப்பு உண்டாகும்.

இந்தவாய்ப்பே வளமான வாழ்வுக்கு வாய்க்காலாகும். அன்பும் பண்பும் அறமும் இல்லாத குடும்பம் சமுதாயக்கட்டுமானங்களுக்குப் புறம்பான தாய் நகர்ந்து அல்லலுறவழி ஏற்பட்டு விடும், ஒருகுடும்பத்தில் ஒற்றுமை அன்பு அமைதி இல்லை என்னும் போது அங்கே நீதியான நியாயமான சான்றாண்மை மிக்க ஒரு தலைமைத்துவம் இல்லை என்றே எண்ணப்படும் இல்லையேல் நியாயமான தலைமைத்து வத்தை அந்தக்குடும்பத்தினர் மதிப்பதில்லை என்றும் கருதப்படும். இவ்விருநிலைப்பாடும் தோன்றாமலிருக்க குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் நெஞ்சுக்கு நீதியானதை ஏற்று நடக்க வேண்டும். உள்ளத்தின் வெற்று உணர்ச்சிகளுக்கு அடிமையாகிக் குழம்பி வாழ்க்கையை பாழ் செய்தலாகாது.

## எங்கள் இறைவா!

நண்ணினோர்க்கு நல்லவனே! இணைந்தோர்க்கு இனியவனே!

நாங்கள் மனிதர்கள் ஒருவரை ஒருவர் மதிக்கவேண்டியவர்கள் ஒருவருக்கு ஒருவர் உதவவேண்டியவர்கள். ஒற்றுமையே எங்கள் ஆணிவேராய் இருக்க வேண்டும். இன்று எங்களுக்குள் மேற்சொன்னவை முழுமையாக ஊறிஉறையவில்லை. என்ன குறையால் இப்படியானோம் என்றும் தெரியவில்லை.

மிருகங்கள் படிப்படியாய் ஒரு முன்னேற்றப்பாதைக்குச் செல்வது போல் தெரிகின்றது. ஒருவீட்டில் படுத்திருந்த நாய் மேல் பூனை ஒன்று ஏறி இருந்து கொண்டு தனதுகால்களை நாக்கால் நக்கி இதம் செய்கிறது. இன்னொருவீட்டில் சாப்பாட்டைக் கண்ட காகம் ஒன்று தன் இனத்தை கா...கா...கா என்று குரல் கொடுத்து அழைக்கிறது. வேறொரு வீட்டு வாசலில் தனது பாலைக் கறந்து பருகும்படி பசுவொன்று நின்று அம்மா! என்று வீட்டுக்காரியை அழைக்கிறது. இந்தக் காட்சிகள் சில மனிதர்களின் கண்களில் பட்டும் பயன் இல்லாமல் போகிறது.

இது ஏன் இறைவா?

மிருகங்களுக்கிருக்கும் நிம்மதி மனிதர்களுக்குள் இல்லையே. காலப்போக்கில் மிருகங்கள் மனித சுபாவத்தைப் பெற்றுக்கொள்ள... மனிதர்கள்... ஐயையோ! எழுதவே பயமாயிருக்கிறது.

இறைவா! எங்களைக் காப்பாற்றி அருள்க!

-புலவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வோம்! உயர்த்துவோம்!

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி.

ஒரு பிராமண இளைஞர் கிராமத்திலுள்ள சேரிக்குச் சென்று, ஹரிஜன மாணவர்களுக்காக ஓர் ஆரம்பப் பள்ளியைத் துவங்குகிறார், ஹரி ஜனங்களைத் தனிமைப்படுத்தி வைத்து அவர்களைத் தீண்டத்த காதவர்களாக நடத்திய ஊரில் - ஹிரிஜனக் குழந்தைகள் மாடுமேய்ப்பது மட்டுமே தெரிந்த தொழிலாக வளர்ந்து கொண்டிருந்த ஊரில்.

ஒரு கிறிஸ்துவ அம்மையார், தெருவில் கேட்பாரற்று நோயாலும் பட்டினியாலும் மாண்டுகொண்டிருந்தவர்களுக்கு, அவர்களைப் பேணும் ஓர் இடத்தைத் துவங்குகிறார். சாப்பாட்டிற்காக, தண்ணீருக்காகச் சாலையில் போவோரை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த நோயாளிகளை, 'சர்வசகஜமான சாலை ஓரக்காட்சிகள் என்று கண்டும் காணாமல் போய்க்கொண்டிருக்கும் மனித இனம் வாழ்கின்ற ஊரில்.

''என் வாழும் உரிமையை நீ பறிக்க முடியாது. சிறையில் தள்ளுவாய், சுட்டுக்கொல்லுவாய் என்பதற்காக அஞ்சமாட்டேன். கடைசி வரை போராடுவேன். அநீதிக்கெதிராக எல்லா மக்களையும் எழுப்பி விடுவேன்'' என்று போராடுகிறார்; ஒரு தென்னாப்பிரிக்கப் பெண்மணி. 'இருப்பதை ஏற்றுக்கொள்; 'மிதக்கிற படகை ஆட்டாதே' என்று மக்கள் அதிகாரத்திற்கும் ஆணவத்திற்கும் பயந்துவாழும் ஊரில்.

ஒரு பிராமண இளைஞன் - ஒரு கிறிஸ்துவ ஆம்மையார் ஒரு தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியர் - இவர்கள் மூவரும் அப்படி என்ன செய்தார்கள்?

தனக்குமேல் உயர்ந்தார்கள்: தனி, மனித எல்லைகளை மீறினார்கள்; தர்ம நெறிகளைக் கடைப்பிடித்தார்கள்.

நாமும் வாழ்கிறோம். சமுதாயத்தின், ஒரு பிரஜையாக வாழ்கிறோம் வாழ்நாளை ஓட்டுகிறோம்.

நம்மில் எத்தனை பேருக்கு இத்தகைய செயல் செய்யத் துணிவு வரும்? தியாக உள்ளம் உண்டு? படித்த நல்லவற்றை வாழ்வில் கடைப்பிடிக்க முயலும் ஆர்வம் உண்டு?

வாழ்வை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அடிப்படைத் தேவைகள்: உணவு, உடை, இருப்பிடம், பாதுகாப்பு என்ற வாழ்க்கையின் அன்றாடத் தேவைகள் நிறைந்த வாழ்வு.

உயர் நிலைத் தேவைகள்: மனித ஆத்மா எழுப்பும் தேவைகள்- உண்மை, நியாயம், சமத்துவம், சுதந்திரம், அன்பு, அழகு என்ற தேவைகள்- அன்றாட வாழ்வை மீறிய தேவைகள், உண்மைக்காக, நியாயத்திற்காக, சமத்துவத்திற்காக, சுதந்திரத்திற்காக மனிதன் வாழ்கிறான்; போராடுகிறான். அதற்காகத் தன் வாழ்வையே அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறான் வாழ்வில் அன்பை, பாசத்தை, கருணையை எங்கும் பரப்புகிறான். காணும் இடங்களிலெல்லாம் அழகை ஆராதிக்கிறான். தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதையே நந்தலாவா'' என்று பாடுகிறான்.

மனித வாழ்க்கை, தேடிச் சோறு நிதம் தின்னும் வாழ்க்கை அல்ல. பல சின்னஞ் சிறுகதைகள் பேசி, தன் புகழைப்பாடி பல கிசுகிசுக்களைப்பரப்பி அதிலே மகிழ்த்து வாழ்ந்து முடிக்கும் ஒன்றல்ல. பிறர் வாடப் பல செயல்கள் செய்து தன் காரியத்தை மட்டுமே கணித்துக்குறியாய் வாழ்ந்து போகும் தர்மமல்ல வாடிப்பல மிக உழன்று, இல்லாதற்கெல்லாம், ஏங்கிக் கஷ்டப்பட்டுக் குமைந்து கவலைப்பட்டு வாழ்வை நரகமாக்கிக்கொள்ளும் முயற்சியல்ல.

பின் எது வாழ்க்கைத் தர்மம்?

மனித எல்லைகளை மீறுவதில் தான் வாழ்க்கைத் தர்மம் அடங்கி இருக்கிறது. விரிவடையும் இப் பிரபஞ்சத்தின் நியதிச்கேற்ப ஆத்மாவிரிவடைந்து, ஞானம் பெற்று பூரணத்துவம் பெறுவதில்தான் வாழ்க்கைத்தர்மம் அடங்கி இருக்கிறது. ஒன்றையொன்று தழுவி நிற்கும் இவ்வுகில் நாம் நம்மை உயர்த்திக் கொள்வதில், வாழும் ஏனையோருக்குக் கைகொடுத்து அவர்களையும் உயர்த்துவதில் தான் வாழ்க்கைத் தர்மம் அடங்கி இருக்கிறது.

வாழ்க்கை- மேல் நோக்கி- உயர்நிலையினை நோக்கி மலையேறும் முயற்சி; இது ஒரு பரிணாம வளர்ச்சி, இதில் நாம் இருக்கிறோம்; நம்மைச்சுற்றி, நம் குடும்பம், தொழில், அடிப்படைத்தேவைகள் என்ற சூழ்நிலை இருக்கிறது. இதைத்தாண்டி சிந்திப்போமானால் நாம் ஏன் பிறந்தோம், நமக்கும் இப் பிரபஞ்சத்திற்கு முள்ள தொடர்பு என்ன என்ற கேள்விகளின் ஞானம் கொடுக்கும் தெளிவு இவ்வுலக வாழ்வை மேம்படுத்துகிறது.

வாழ்வின் காரணத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எந்த உண்மையில் இவ்வுலகம் இயங்குகிறது என்ற அறிவை நாம் பெறவேண்டும். பிறகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அதைப் பயில வேண்டும்; நாம் கண்டு பிடித்த உண்மைகளை நாம் அப்பியாசிக்க - வாழ்வில் கடைப்பிடிக்க முயல வேண்டும்.

நமது முயற்சியில் நாம் தவறிப் போகலாம். பூரணமாக வெற்றி பெற்றிருக்கமாட்டோம். அது பெரிய விஷயமல்ல ' நமது முயற்சிகளின் வலிமையைத்தான் நாம் விரும்பும் முடிவுகளின் பலனாக நாம் கருதவேண்டும்! என்று எழுதுகிறார் தத்துவஞானி ஜேம்ஸ் ஆலன்.

வாழ்வை நடத்திச் செல்லும் தர்ம நெறிகளை உணர்ந்து கொள்வது எளிதல்ல.

அதற்குத் தேவை: அறிவு, அனுபவம், (வயது) உலகஞானம் என்ற இந்த மூன்றும். சுயமே சிந்திப்பதன் மூலமும் நமக்கு முன்னே வாழ்ந்தோர் விட்டுப் போயிருக்கும் ஞானமார்க்க நூல்களிலிருந்தும் நாம் அறிவைப் பெறலாம். நம் அனுபவம், பிறர் அனுபவம் நமக்குப் பலவற்றைக்கற்றுக் கொடுக்கின்றன. இதுவன்றி, வயதேற ஏற நமக்கு ஓர் 'உலக ஞானம்' ஏற்படுகிறது. தனித்தனியாக தென்பட்டபல பகுதிகளும் ஒன்றிணைந்து இயங்கும் பிரபஞ்சமாய்த்தோன்றுகிறது.

இவ்வுலகம் காரணகாரியத் தொடர்பு கொண்டிருக்கிறது. அப்படியெனில் நாம் வந்ததற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும், அந்தக்காரணத்தைத்தான் ஒரு பிராமண இளைஞனும், கிறிஸ்துவ அம்மையாரும், தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியரும் உணர்ந்தார்கள்.

பிறருக்காகவும், ஊர் உலகத்திற்காகவும் வாழும் போதுதான் உகலம் உயர்கிறது- நாமும் உயர்கிறோம். கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் மூலம் சேவை செய்வதானாலும் சரி, நாட்டு விடுதலைக்காக ஆங்கிலேயருக்கெதிராக மகாத்மா காந்தி போர்க் கொடி உயர்த்திய விஷயமானாலும் சரி, தன்மையில் இரண்டும் ஒன்றுதான். லட்சியத்தின் கனத்திற்கேற்ப பலன்கள் சிறிய அளவிலோ பெரிய அளவிலோ கிடைக்கின்றன.

எண்ணங்கள் காந்தசக்தி கொண்டவை. உயர் நிலைத் தேவைகளைச் சுற்றி உங்கள் எண்ணம் வியாபிக்கும் போது ஒத்த சக்திகளையும் பலன்களையும் அந்த எண்ணங்கள் உருவாக்குகின்றன.

வாழ்வின் உண்மைகளைப் புரிந்து கொண்டு உயர, நாம் நம் சொந்த வாழ்வை முன்னேற்றிக் கொள்ளவேண்டும்.

நம் எல்லோருக்கும் விஷயங்கள் புரிகிறது! '' இது சாப்பிடலாம் இது சாப்பிடக்கூடாது, இந்த உணவைச் சாப்பிட்டால், வீண்சதை போடும்!'' என்று. தெரிகிறது. ஆனால் நெறி நம்மில் பலரிடம் இல்லை அந்த நெறியை, (DISCIPLINE) சட்டுப்பாட்டை நாம் கொஞ்சங் கொஞ்சமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட வயதுக்குப்பின் வாழ்வை நாம் செக்கு மாட்டுப் பயணம் போல்- செய்தவைகளையே செய்து கொண்டு- நமது எண்ணப் பழக்கமே சரியானது என்ற நினைவில் வாழ்வை ஓட்டி முடித்துக் கொள்கிறோம்.

இதை நாம் மாற்ற வேண்டும். நம் தேவை, நம் லட்சியம் இவற்றை முன்வைத்து- அவற்றை அடைய 'நாம் பழக்கங்ளை மாற்றிக் கொள்ள வேண்டும், எப்படி எப்படிச் செயல்படவேண்டும், என்று சிந்தித்துத்திட்டமிட்டு நாம் மாறவேண்டும். கட்டுப்பாடு நெறிகள்- என்ற திட்டங்கள் மூலம் தான் நாம் நம் காரியத்தை அடைய முடியும். இது இரண்டாவது.

நம்மில் பலர் செயலில் இறங்குவதில்லை. லட்சியங்களைப்பற்றி நாம் ஆசைப்படுகிற அளவுக்கு, நம் ஆர்வம் இருக்கிற அளவுக்கு நாம் காரியம் செய்வதில்லை,

காரியம்- செயல்- ஒன்றுதான் பலனைக் கொடுக்கும். வெறும் விருப்பம் மட்டும் எதையும் செய்யாது. ஒன்றைத் தீர்மானித்துவிட்டார்ளானால் அமெரிக்கர்கள் செயல்படுகிறார்கள். நாம் அதிகம் யோசிக்கப் பழக்கப்பட்டிருக்கிறோம். அதிகம் செயல்பட அல்ல.

கீழைநாட்டு கலாசார வேறுபாடுகளை ஆராய்ந்த ஒரு ஜப்பானியப் பேராசிரியர், சீனர்கள் எதையும் நடைமுறைக்கேற்ப சிந்திக்கும் வழி முறைகளை கடைப்பிடிப்பவர்கள் என்றும் சிந்திப்பதை ஓர் அறிவாகஅதிகம் பயன் படுத்துபவர்கள்'' என்றும் குறிப்பிடுகிறார்.

அறிவு, மனோபாவம், செயல்.

Nallur Branch Library

ஒரு விஷயத்தைப்பற்றிய அறிவு அதைப்பற்றிய பயத்தைப் போக்கி, நமக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்தி விஷயங்களை எளிதாக்குகிறது. ஆகவே வாழ்வின் தாத்பரியம் பற்றிய அறிவை நாம் முதலில் பெறவேண்டும்.

இரண்டாவது: நமது மனோபாவம்; ஒரு நெறி; அதாவது முடியும் என்ற ஓர் உற்சாகமான மனோநிலை

மூன்றாவது; செயல், முயற்சி, காரியம் என்று ஈடுபட்டாலொழிய பலன் வராது. உயிரின் இயல்பு சதா செயல் படுவதுதான் என்று ஒரு குறுந் தொகைப்பாட்டு கூறுகிறது.

உயர் நெறிகளை வாழ்ந்துகாட்டியவர்கள் தான் சங்கரர், மகம்மது, ஏசுபிரான். புத்தர், காந்தி என்ற பெரியோர்கள். இவர்கள் நமக்காக வாழ்ந்து காட்டிய முன்னோடிகள். இவர்களது சிந்தனையும், சொல்லும், செயலும்தான் உலகையும் நம்மையும் உயர்த்திச் செல்கின்றன. உயர்சிந்தனைக்கு- உயர்நெறிகளுக்கு அவர்கள் நமது முன்னோடிகள். அந்த தர்ம நெறிகளால் உயர்வோம். உயர்த்துவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதித்துறையில் சுடர் ஒளி பரப்பிய அப்துல் காதர்

வே. வரதசுந்தரம்

**" இறைவனே நல்ல நீதி தேவன். நீதி வழங்குவது இறைவனின் கைங்கரியம், மண்ணுலகில் பிணக்குகளைத் தீர்க்கச் சந்தர்ப்ப வசத்தால் நீதிபதிகள் நியமிக்கப்படுகிறார்கள். நாம் இறை நம்பிக்கையுடன், எளிமையுடன், நடுவு நிலை தவறாது பணியாற்ற வேண்டும்'!**

**இத்தகைய உறுதிப்பாட்டுடன் சேவையாற்றிய நீதிபதி அப்துல் காதர் தனது எழுபத்திரண்டாவதுவயதில் அண்மையில் காலமானார்**

1953ம் ஆண்டிலே கொழும்பு நீதிபதியாக பதவி ஏற்றதும் அவர் புத்தூக்கத்துடனும், இளமைத்துடிப்புடனும் தமது கடமைகளை ஆற்றினார். 1946ம் ஆண்டு தொட்டு யாழ்ப்பாணத்திலே பல சிவில் வழக்குகளை நடத்தியும், சிவில் துறையிலே துறைபோந்த பல முதுபெரும் வழக்கறிஞர்களுக்கு அனுசரணையாக இருந்தும், அவர்களுடன் மோதியும் பெற்ற அனுபவத்தின் காரணத்தினால் அவர் நீதிபதியாகத் தமது கடமைகளைச் சிறப்புடன் ஆற்ற முடிந்தது எனலாம்.

ஐம்பதுகளிலே நீதிபதியாக இருந்தபோது அவர் முன்னால் போதைப்பொருள் வழக்கொன்று விசாரணைக்கு வந்தது. கொழும்பு மாநகரில் போதைப் பொருள் விற்பனையில் விற்பன்னராக விளங்கிய ஒருவர் நீதிமன்றில் எதிரியாக ஆஜர் செய்யப்பட்டார். விசாரனை முடிவில் நீதிமன்று அவரைக் குற்றவாளியாகக் கண்டது. நீதிபதி அப்துல் காதர் எதிரிக்கு கடும்தண்டனை வழங்கினார். சட்டம் அனுமதித்த ஆகக் கூடிய தண்டனையை வழங்கினார். போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாக இருக்கக்கூடிய வகையில் அத்தண்டனை அமைந்திருந்தது.

பொருள் வசதிபடைத்த அக்குற்றவாளி மேன்முறையீடு செய்து திறமைவாய்ந்த நீதிபதியை ஆஜர் செய்தார். உயர் நீதிமன்றம் ஒரு நடைமுறைக்குறைபாட்டைக் காரணமாக வைத்து தண்டனையை ரத்து செய்து எதிரியைப், போதைப்பொருள் குற்றவாளியை விடுதலை செய்தது.

''உயர் நீதிமன்றம் நடைமுறைவழு காரணமாக விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவரை அதுவும் போதைப்பொருள் குற்றத்தில் சம்பந்தப்பட்ட ஒருவரை மீள் விசாரணைக்கேனும் உத்தரவிடாமல் விடுதலை செய்து விட்டது'' என்று இளம் நீதிபதி அப்துல் காதர் மனமுடைந்து போனார். அவ்வேளையில் அவருக்கு நீதியரசர் மாணிக்கவாசகர் ஆறுதல் வழங்கினார்.

''ஒரு நீதிபதி தீர்ப்பு வழங்கும் போது; எனது தீர்ப்பை உயர் நீதிமன்று எந்தக் கோணத்தில் பார்க்கின்றது. என்று சிந்திக்கக் கூடாது. மாறாக நீதி அடிப்படையில் சட்டங்களின் அடிப்படையில் நீதித்துறைப் பாரம்பரியப் பின்னணியில் நான் தீர்ப்பை வழங்கியுள்ளேன். என்றதுணிபு ஒரு நீதிபதிக்கு இருக்க வேண்டும்.

அத்தகைய தீர்ப்பினை உயர்நீதிமன்று அங்கீகரிப்பின் நீதிபதி மகிழ்ந்து துள்ளவோ அல்லது தீர்ப்பு ரத்துச் செய்யப்படின் மனம் நொந்து துவளவோ அவசியம் இல்லை.'' இப்படி நீதியரசர் மாணிக்கவாசகர் நீதிபதி அப்துல் காதருக்கு ஆறுதல் கூறினார்.

சாவகச்சேரி நீதிமன்றிலே அவர் மாவட்ட நீதிபதியாக கடமையாற்றியபோது இரு கட்சிக்காரர்களின் சார்பில் அவரது ஆசிரியர்கள் இருவர் தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார்கள், ஒருவர் அவருடைய ஆசிரியராக இருந்த திரு முத்துச்சாமிப்பிள்ளை. மற்றவர் பல்கலைக் கழகத்தில் அவருடைய விரிவுரையாளராக இருந்த திரு. சி. சுந்தரலிங்கம் அப்பொழுது இரு வழக்கறிஞர்களும் மிகக் கோபமாக வாதம் செய்தார்கள். திரு. சி. சுந்தரலிங்கம் உச்சத்தொனியில் தனது மாற்றுக் கட்சிக்காரரின் வழக்கறிஞரோடு வாதம் செய்தார்.

இந்தக் கட்டத்தில் நிலைமையைச் சமாளிக்க அப்துல் காதர் மிகச்சுவையான வழியைக் கையாண்டார். ''அறிவுசால் வழக்கறிஞர் சுந்தரலிங்கம் அவர்களே! நீங்களும் உங்கள் சகோதரர் தியாகலிங்கமும் கொழும்பில் ஒரு ஆங்கிலேய நீதிபதியின் முன்னால் தான்றி இரு கட்சிக்காரர்களுக்காக ஆஜராகி இவ்வாறு மோதியபோது அவர் உங்கள் இருவருக்கும் சொன்னது இன்று எனக்கு ஞாபகம் வருகிறது.' நீங்கள் இருவரும் இப்படிச் சண்டைபோட்டால் இந்த வழக்கை உங்கள் நீதியரசர் நாகலிங்கத்திற்கு முன்னால் விசாரணைக்கு அனுப்பி விடுவேன்'' என்றார் அல்லவா - இப்படி நீதிபதி அப்துல் காதர் சொன்னதும் வீராவேசத்துடன் விளங்கிய திரு. சுந்தரலிங்கம் வாய்விட்டுச் சிரித்து அமைதி ஆனார்.

அவர் திருகோணமலையிலே மாவட்ட நீதிபதியாக அறுபதுகளிலே கடமையாற்றிய போது தமிழ் இலக்கிய விழாக்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் முழுமையாக ஈடுபட்டார். தமிழ் இலக்கிய விழாக்களிலே இனிய மக்கள் உள்ளங்களை கொள்ளை கொள்ளும் வகையிலே கருத்தாளம் பொதித்த சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

அவர் இஸ்லாமிய நெறியை உறுதியாகப் பின்பற்றிய போதிலும், சைவ சமய விழாக்களிலே பங்கு பற்றத் தவறுவதில்லை. நவராத்திரி விழாக்களிலே தோன்றி அறிவுத்திறம் பற்றி அருமையான சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

திருகோணமலை சிவயோக சமாஜ ஸ்தாபகர் சுவாமி கெங்காதரானந்தாஜீ அவர்களின் சமய சமூகப் பணிகளைக் கண்டு அவரிடத்தே பேரன்பு பூண்டவர் திரு அப்துல் காதர். இவ்வாறு சமய பொதுமை நாடியவர் சமயப் பொறை நாடியவர்.

அப்துல் காதர் இஸ்லாமிய நெறியிலே அசைக்க முடியாத நம்பிக்கையோடு உறுதியாக வாழ்ந்து தனது ஓய்வு காலத்திலே ஆன்மீக மேம்பாட்டிலே திளைத்தவர், இலங்கை இஸ்லாமிய நிலையத்தின் முதலாவது தலைவராக அமைந்து இஸ்லாமிய வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஓய்வு காலத்திலே அயராது உழைத்தவர் நீதித் துறையிலே இறை உணர்வுக்கு முதலிடம் வழங்கியவர்.

'' இஸ்லாமிய நீதி இறைவனால் வழங்கப்பட்டது 1400 ஆண்டுகள் உருண்டோடியும் இஸ்லாமிய சட்டத்திலே- திருக்குரானிலே- ஒரெழுத்துதானும் மாற்றப்படாதவாறுகாலம் கடந்து நாடுகடந்து மக்கள் சமுதாயத்தில் நடைமுறைப்படுகிறது. இது ஒரு புனித நீதி-'' இப்படி இஸ்லாமிய நீதித்துறை, இஸ்லாமிய நெறிபற்றி பெருமைப்படுவார் திரு அப்துல் காதர்.

## என் பிரியவசந்தமே !

அடீ............
அந்தப்
பறவைகளைப்பார் !

சிறகுகளுக்கு
உறுதிவருகிறவரை.........
தாய்மைக்கூடு
பிறகு........
விரும்பிய துணையோடு
தனிக்கூடு

அதுதானடி வாழ்க்கை !
இந்தச்சிறைவாழ்க்கை
இன்னும் தேவையா...?

நகர்ந்து கொண்டிருக்கிற
வசந்தம்
நம்மைப்பார்க்கிறது
ஓடிவா.........

சங்கக்குறிஞ்சிகளை
நாம்
சேர்ந்தே நுகர்வோம்!

நமது பசிக்கு
இன்னுமா
இரண்டுஅடுப்பு ?

அடீ.........
சீக்கிரம்
ஓடிவாயேன் !

கே. அறிவுமதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சூரியனின் தமிழ் உலா
## (சுவாமி விபுலானந்தர்)

இ. தனபாலசிங்கம்

மனிதர்கள் வாழ்க்கையில் நூற்றிருபது ஆண்டுகள் வாழ்வதை நிறை வாழ்வு என்பார்கள். நவ கோள்களின் ஒரு சுற்று முடிய இத்தனை ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் மனிதன் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தான் என்பதை விட அவன் வாழ்ந்த ஆண்டுகளில் தனக்கும் தன் சமுதாயத்துக்கும் என்ன செய்தான் என்பதே முக்கியமானது. இசைத் தமிழைப் பற்றி விரிவாக ஆராய்ந்த இசையறிஞர் தவத்திரு விபுலானந்த அடிகள் பிறந்து நூறாண்டாகிறது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் மட்டக்களப்பு இதை மீன்பாடும் தேன்நாடு என்று அழைப்பார்கள். மட்டக்களப்புக்குத் தெற்கே 22 மைல் தூரத்தில் காரைதீவு என்னும் சிற்றூர் உண்டு. இந்த காரைதீவில் 1892ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி சாமித்தம்பியார் என்பவருக்கும் கண்ணம்மையாருக்கும் ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு மயில்வாகனன் என்று பெயரிட்டார்கள் சாமித்தம்பியார் அவ்வூர் தலைமை அதிகாரியாகப் பணிபுரிந்தார்.

மயில்வாகனனார் தமது தந்தையாரிடமும், குஞ்சித்தம்பி என்பவரிடமும், தாய் மாமன்மாராகிய வசந்தராசபிள்ளை, சிவகுருநாதபிள்ளை என்பவர்களிடமும் பாடம் கேட்டு வந்தார். சிறு வயதிலேயே மதிநுட்பம் மிக்கவராய் விளங்கினார் இவர். 10 வயது வரை காரைதீவில் உள்ள தமிழ் பாடசாலையிலேயே கல்வி கற்றார். வைத்திலிங்க தேசிகர் பாடசாலையின் தலைமை ஆசிரியர். அவரிடம் திருக்குறள், பாரதம், நன்னூல், சூடாமணி நிகண்டு வடமொழி முதலியவைகளை ஐயந்திரிபறக் கற்றார். தாய்மாமன் மாரிடம் வீட்டில் ஆங்கிலமும் கற்றார். விளையும் பயிரை முளையிலேயே தெரியும் என்பதற்கிணங்க மயில்வாகனன் 10 வயதிலேயே தனது கவிபாடும் திறமையைக்கூட வெளிப்படுத்தினார்.

காரைதீவில் இருந்து வடக்கே 3 மைல் தூரத்தில் கல்முனை என்னும் ஊர் இருக்கின்றது. அங்கேயுள்ள மெதடிஸ்த மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் மயில்வாகனனை சேர்த்தார்கள். இந்தப் பாடசாலையில் 4 ஆண்டுகள் கல்வி கற்றார். அதற்கு மேல் அப்பாடசாலையில் வகுப்புகள் இல்லாததால் மயில்வாகனனை மட்டக்களப்பிலுள்ள புனித மைக்கேல் கல்லூரியில் சேர்த்தார்கள். அங்கே திறம்படக் கல்வி கற்று ஆசிரியர்களையும் பெற்றோரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார், 16 வது வயதில் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினரின் சீனியர் வகுப்புத் தேர்வில் அக்கல்லூரி மாணவர்களுள் முதல்வராகத் தேறினார். ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்கி புனித மைக்கெல் கல்லூரியில் 2 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். 1911ம் ஆண்டு மயில்வாகனனாரின் தாயார் காலமானார். தாயின் மரணம் மயில்வாகனனாரை துன்பக்கடலில் ஆழ்த்தியது. ஆசிரியர் வேலையை இராஜினாமாச் செய்துவிட்டு தமது ஊரான காரைதீவில் போய் தங்கியிருந்தார். சிறிது காலத்தின் பின் காரைதீவில் இருந்து வடக்கில் 3 மைல் தொலைவில் உள்ள கல்முனையில் இருந்த கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்தார்.

மயில்வாகனனாருக்குத் தான் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராக வரவேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அதனால் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு உரிய நுழைவுத் தேர்வை எழுதினார். அதில் சித்தியும் பெற்றார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி கொழும்பு மாநகரில் இருந்ததால் அவர் கொழும்பு வந்து சேர்ந்து 2 வருட காலம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்றார், அவர் ஓய்வு நேரங்களை வீணே கழிக்காமல் சங்க இலக்கியங்கள் படிக்க விரும்பினார். அக்காலத்தில் யாழ்ப்பாணத்தவர்கள் பலர் தொழிலின் பொருட்டு வெள்ளவத்தையில் தங்கியிருந்தனர். அவர்களில் புலவர் எஸ். கந்தையாபிள்ளை, வித்துவான் சி. தாமோதரம்பிள்ளை, வித்துவான் எஸ். கைலாசம்பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களிடம் மயில்வாகனனார் முறையாக சங்க இலக்கியங்களை கற்றறிந்து தமது புலமையையும் வளர்த்துக் கொண்டார். அதே நேரத்தில் கொழும்பு விவேகானந்த சபையிலும் ஒரு உறுப்பினராகச் சேர்ந்தார். இரண்டு ஆண்டுகள் முறையாக ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயின்று வெளிவந்த மயில்வாகனாரை மட்டக்களப்பு புனித மைக்கெல் கல்லூரி ஆசிரியராக அமர்த்திக் கொண்டது. மேலும் படிக்க எண்ணிய அவர் ஆசிரியர் பணியை துறந்து 1915ம் ஆண்டில் அரசினர் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து மேற்கல்வி கற்றார். விஞ்ஞானத்தில் சிறந்து விளங்கிய A. F. யோசேப், W. N. நேய் ஆகியோரிடம் விஞ்ஞானக்கலையை சிறப்புடன் கற்றார். 1916ம் ஆண்டு நடந்த பரீட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சையில் முதல்வராய் தேறி டிப்ளோமா பட்டம் பெற்றார்.

மதுரைத் தமிழ் சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் இலங்கையிலிருந்து தோற்றி சித்தியடைந்த முதல் மகன் மயில்வாகனனாரே. இந்நேரத்தில் இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தா இலங்கை வந்து பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். காவியுடையுடன் தோற்றமளித்த சர்வானந்தரின் பேச்சைக் கேட்ட மயில்வாகனனார் யாக்கை நிலையாமை பற்றிச் சிந்தித்தார். மனிதன் இருப்பது பொய், இறப்பது மெய் என்ற தத்துவத்துக்கு சுவாமி சர்வானந்தரிடம் தனிமையில் விளக்கம் கேட்டு தெளிவடைந்தார். தாமும் துறவு பூண்டு தமிழுக்கும் சமுதாயத்துக்கும் தொண்டு செய்யவேண்டும் என்றும் அவாவினால் மண், பெண், பொன் ஆகிய ஆசைகளை துறக்க எண்ணி மேலும் படித்தார். சுவாமி சர்வானந்தரை ஞான குருவாகக் கொண்டார், 1916ம் ஆண்டு அரசினர் பொறியியற் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்று வெளிவந்த மயில்வாகனார் அங்கேயே உதவி ஆசிரியராக கலைப் பீடம் அமர்த்திக்கொண்டது. மாணவர்களுக்கு விஞ்ஞானத்தை திறம்பட கற்றுக்கொடுத்தார். அவர் புகழ் கொழும்பு மட்டுமன்றி தமிழர் வாழும் இடமெங்கும் பரவியது, புனித சம்பத்தாசிரியர் கல்லூரி முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்கி 1917ம் ஆண்டு அக்கல்லூரியில் விரிவுரையாளரானார். மாணவர்களுக்கு கற்பித்துக் கொண்டு தாமும் கற்று லண்டன் B.Sc பரீட்சையில் சித்தியடைந்தார், கணித வல்லுனராக விளங்கினாலும் தமிழ் கற்கும் ஆசை அவரை விடவில்லை.

சுன்னாகம் குமாரசாமிப் புலவர், இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த திருவிளங்கம் மற்றும் பல தமிழறிஞர்களிடம் சென்று தமிழ் கற்றார். யாழ்ப்பாணத்தில் அப்போது ஆங்கில மோகம் பரவியிருந்த காலம். ஆனால் மயில்வாகனாரைப் போல் தமிழிலும், ஆங்கிலத்திலும் விஞ்ஞானத்தைக் கற்பிக்கக்கூடிய திறமை யாருக்கும் இருக்கவில்லை. இவரின் திறமையைக் கண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி நிர்வாகத்தினர் தம் கல்லூரி அதிபர் பொறுப்பை 1920ம் ஆண்டு மயில்வாகனனாரிடம் ஒப்படைத்தனர். கல்லூரிக்கு விஞ்ஞான கூடம் அமைத்தார். தாமே விஞ்ஞானத்தையும் கற்பித்தார். இலத்தீன் மொழியைத் தமிழ் மொழியுடன் இணைத்து ஏற்றத் தாழ்வுகளை ஆங்கிலத்துடன் ஒப்பு நோக்கி தமிழின் மாண்பை உயர்த்தினார்.

தமிழ் வளர்க்க ஒரு சங்கம் அமைக்க எண்ணி அறிஞர்களைக் கலந்து பேசி யாழ்ப்பாணத்தில் ''ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம்'' என்ற அமைப்பைஉருவாக்கினார். அச்சங்கம்பண்டித, சைவப் புலவர் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்தது. இச்சங்கம் எத்தனையோ பண்டித மணிகளை, சைவப் புலவர்களை உருவாக்கித்தந்தது, மயில்வாகனனார் தமது 12 வது வயதிலேயே கவியாகும் திறமை பற்றிருந்தார். கவிஞர் தாகூரின் கீதாஞ்சலிக் கவிதைகள் சிலவற்றை தமிழில் மொழிபெயர்த்தார். ஆங்கிலக் கவிதைகளையும் உரை நடையையும் தமிழில் மொழிபெயர்த்தார் சுவாமி விவேகானந்தரின் அரிய நூல்களை தமிழாக்கம் செய்தார். இவருக்கு இலத்தீன், கிரேக்கம், வங்காளி, சிங்களம். அரபி, வடமொழி ஆகியனவற்றில் பாண்டித்தியம் இருந்தது.

மயில்வாகனனாருக்கு சைவசித்தாந்தத்தைப் போதித்த இந்துக் கல்லூரி ஆசிரியர் திருவிளங்கம் நோய் வாய்ப்பட்டார். நோயின் கொடூரம் அவரின் உருவத்தையே மாற்றிவிட்டது. யாக்கை நிலையாமையை நேரில் பார்த்த, மயில்வாகனனாருக்கு இது ஒரு தெளிவைக் கொடுத்தது. திருவிளங்கம் இயற்கையெய்தினார். இதைக்கண்ட மயில்வாகனனார் யாக்கை நிலையாது. அஃது என்றேனும் ஒரு நாள் அழிந்து மண்ணோடு மண்ணாகி விடும். ஆகையினால் பெற்ற உடம்பை பிரியும்வரை மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும். அதற்கு துறவுதான் என்று கண்டு, இந்துக் கல்லூரி அதிபர் பொறுப்பை இராஜினாமா செய்துவிட்டார். 1922ம் ஆண்டு இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து சென்னை புறப்பட்டார்.

ஆலயங்களும், மடாலயங்களும் சைவத்தை வளர்க்கவே தோன்றின. மடாலயங்களில் துறவிகள் தங்கி வாழ வழிவகை இருந்தது, இராமகிருஷ்ண மடமும் அது போன்ற ஒன்றே, இதில் மயில்வாகனனார் தங்கி துறவியாவதற்கு வேண்டிய ஒழுங்கு முறைகளைக் கற்றார். அப்போது அவருக்கு ''பிரபோத சைதன்யா'' என்னும் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

பல அறிஞர்கள் ஒன்று சேர்ந்து சென்னையில் 'தமிழர் கல்விச் சங்கம்'' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டனர். அச்சங்கத்தில் பிரபோத சைதன்யா கலந்து கொண்டு அரிய பல விரிவுரைகள் நிகழ்த்தினார். பலகலைச் சொற்களை உண்டாக்கினார். இவற்றுடன் இராமகிருஷ்ண மடம் வெளியிட்டு. வந்த மாத ஏடுகளான ''இராமகிருஷ்ண விஷயம்'' ''வேதாந்த கேசரி'' (ஆங்கிலம்) முதலியவற்றுக்கு ஆசிரியராக இருந்து இரண்டு ஏடுகளையும் திறம்பட நடத்தினார். மடாலய வாழ்க்கையை மேற்கொண்டிருந்த போது பிரபோத சைதன்யாவுக்கு டார்டர் உ. வே. சாமிநாதஐயர் கவியோகி சுத்தானந்த பாரதியார் போன்ற தமிழறிஞர்களின் நட்புக் கிடைத்தது. இராமகிருஷ்ண விஷயம் வேதாந்த கேசரி முதலிய ஏடுகளுக்கு ஆசிரியராக இருந்த போது பிரபோத சைதன்யருக்கு அரிய நூல்களைப் படிக்கும் வாய்ப்புக்கிட்டியது. ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளை இரசித்துப்படித்து அதன் பயனாய் ''ஆங்கில வாணி'' பூஞ் சோலைக்காவலன்'' ஆகிய அரிய கட்டுரைகளை வெளியிட்டார்.

(அடுத்த இதழில் முடியும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கேட்பதெல்லாம்.....!

நான் மீண்டும் கடலிற்குச் செல்ல வேண்டும்!
அந்த நீளமான கடல்... பரந்து விரிந்த ஆகாயம்
ஒரு உயரமான கப்பல்!
ஒரு சின்ன நட்சத்திரம் பிரகாசமாய்
எனக்கு வழிகாண்பிக்க
மெல்லிய காற்று சங்கீதம் இசைத்தபடி தொடர
அதற்கேற்ப அசைந்தாடும் கப்பலின்பாய்
சாம்பல் வர்ணமாய்...
கடலின் மீது கவியும் முடுபனி..
மெதுமெதுவாய்த் தோன்றும்
அந்த விடியலின் ஆரம்பம்..!
நான் மீண்டும் கடலிற்குச் செல்ல வேண்டும்!
அந்தக் காலம் வரவேண்டும்
அந்தப் பருவம் மீண்டும் வரவேண்டும்
கடல் எனக்கு அழைப்பு விடுக்கின்றது!
அது பலவந்தமான அழைப்பு
சிறிது முரட்டுத்தனம் மிகுந்ததாய்
அந்த அழைப்பை என்னால் புரிந்துகொள்ள
முடிகிறது தெளிவாய்!
நான் இப்போது கேட்பதெல்லாம்
ஒரு நாள்! முழுதாய்
காற்றோட்டமானதாய்
தெளிவான வானம்
வெள்ளை முகில்கள் அலைந்துகொண்டிருக்கிறதாய்!
நீர்த்துளிகளின் மெலிதான தூறல்
திவலைகளாய்!
இதமாய் வீசும் தென்றல்
நுரைநுரையாகப் பொங்கும் அலைகள்!
கடற்பறவைகளின் இனிமையான பாடல்

நான் மீண்டும் கடலிற்குச் செல்லவேண்டும்
ஒரு நாடோடியின் வாழ்க்கை எனக்கு வேண்டும்.
நான் கேட்பதெல்லாம்
ஒரு சந்தோஷமான வாழ்க்கை
சிரிப்பைவிட எதுவுமே தெரியாததாய்
எதற்குமே கட்டுப்படாததாய்
ஒரு கடற்பறவையைப் போல பாடியபடி
அலைய வேண்டும்!
ஒரு திமிங்கிலம் போல நீந்தவேண்டும்!
ஆம் எனக்கு ஒரு சுதந்திரமான வாழ்க்கை
வேண்டும்
கூர்மையான காற்றின் ஸ்பரிசத்தின்
தாலாட்டில்
ஒரு அமைதியான தூக்கம்
இனிமையான கனவு
இவற்றின் நினைவுகள் நீளமாய்.....
நிஜமாய் தொடர்ச்சியாய்......
ஆம் நான் கடலிற்குப் போகவேண்டும்
கட்டாயமாய்!

ஆங்கிலத்தில் ஜோன்மேஸிஃபீல்ட்
தமிழில்- மைதிலி அருளையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குணதாஸ அமரசேகரவின் 'அபூர்வ நிகழ்ச்சி'

மு. தளையசிங்கம்

குணதாஸ அமரசேகரவின் ''அபூர்வ நிகழ்ச்சி'' என்ற சிறு கதையை மொழிபெயர்த்த 'நீள்கரைநம்பி' நான் கூறப் போவதையிட்டு அதிகம் கவலைப்படத் தேவையில்லை. காரணம் கதை எழுதிய குணதாஸ அமரசேகரவின் தரத்தையும், நோக்கத்தையும் பற்றிய மதிப்பீடு இது. அதனால் ஒரு வகையில் நாம் எல்லாரும் விடுபட்டு நின்று உண்மையைச் சீராக ஆராயவும் உதவியாக இருக்கிறது. ஒரு சராசரி இன்றைய எழுத்தாளனுக்கு உதாரணமாக குணதாஸ அமரசேகராவை எடுத்துக்கொள்வோம்.

அவரது 'அபூர்வ நிகழ்ச்சி' என்னதைக் கூறுகிறது?

வாழ்க்கையில் சம்பந்தமில்லாமல் தெரிகிற நிகழ்ச்சிகள் கூட நம்மோடு ஏதோ வாழ்க்கையில் சம்பந்தப்பட்டு வருகின்றன என்றும் எல்லாவற்றுக்கும் பின்னால் அத்தோடு இன்னுமொன்று: அந்த மர்மத்தை அல்லது புதிரை அறிய வேண்டும் என்ற அவா கதையில் எழுப்பப்படவில்லை. அப்படி ஒரு மர்மம் உண்மையில் இல்லை, அது வெறும் கானல் என்ற வகையிலும் பதிலளிக்கப்படுகிறது. கதை, சுட்டுக் கொல்லப்பட்டு விட்டிருக்கக்கூடிய நாயை, அந்தப் பிச்சைக்காரன் அர்த்தமற்றுத் தேடித் திரிகிறான் என்பதைக் கூறுகிறது. அவனைக் குழப்ப கதையில் வரும் கதாநாயகன் முயலவில்லை. அவனது ''பற்று'' (நாயிடமுள்ள பற்று) அவனை எப்படியாவது வாழ வைத்துக் கொண்டிருக்கட்டும், ஏன் குழப்புவான் என்ற நினைவோடு தமது வாழ்க்கையும் அப்படி அர்த்தமற்ற தேடல் தானே என்ற எண்ணத்தோடும் கதை முடிக்கப்படுகிறது.

(1) இக்கதையில் வாழ்க்கை பற்றிய உண்மை புதி

---

**காலஞ்சென்ற எழுத்தாளர் மு, த. நீள்கரை நம்பி மொழிபெயர்த்த குணதாஸ அமரசேகர என்ற சிங்கள எழுத்தாளரின் ''அபூர்வ நிகழ்ச்சி'' பற்றி நீள்கரை நம்பி அவர்களுக்கே கடிதமூலம் எழுதியனுப்பிய ஒரு விமர்சனம் இங்கே பிரசுரிக்கப்படுகிறது.**

**மு. த. காலஞ்சென்ற பின் இது காலவரை எந்தப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படாத அவரது இப்படைப்பைப் பிரசுரிப்பதில் 'வாழ்க்கை' பெருமையடைகிறது.**

---

உள்ள ஏதோ ஓர் உண்மை ஏதோ ஒருவகையில் புதிராகவும் ஆச்சரியப்படும் வகையிலும் இயங்குகிறது என்றும்; இனந்தெரியாத முறையில் புத்தி பூர்வமாக இல்லாது, உணர்வு ரீதியாக மட்டும் அதுவும் ஓர உணர்வாக அது உணரப்படுகிறது என்றும் கதை தெரிவிக்க முயல்கிறது. ஒரு புதிர், ஒரு மர்மம் — அது பற்றிய ஓர உணர்வு. வாழ்க்கையைப் பற்றிய உண்மைக் கதை அவ்வளவுதான் காட்டுகிறது; ராகவும் அதே சமயம் அர்த்தமற்ற கானலாகவும் காட்டப்படுகிறது. அதுவும் வெறும் ஓர உணர்வு மூலமாக.

(2) கதையில் இந்தப் புதிரை உணர்வு பூர்வமாக உணர்த்தும் போக்கால் கலை இருக்கிறது. மரபு ரீதியான இலக்கியத்திடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒன்று. ஆனால் அது வாசகனின் புத்திபூர்வமற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையில் ஒருவித சோகத்தையும் புதிர் உணர்வையும் எழுப்புவதோடு — அதற்குரிய சிறு பரவசத்தோடு நின்றுவிடுகிறது.

இந்த இலக்கியம் எவ்வளவு தூரம் ஆத்மதிருப்தி ஏற்படுத்துகிறது?

வாழ்க்கையின் உண்மை பற்றி விஞ்ஞான ரீதியாக ஆய்ந்துணர்பவர் புத்தரின் பௌத்த கலாசாரப் பின்னணியில் வாழ்பவர் குணதாஸ அமரசேகர.

ஆனால் அவரது கதை நாய் செத்துப்போனதை அறியாது, அந்தப் பகுதியில் வாழும் பிச்சைக்காரனைப் பற்றிக் கூறுவது.

அதனால் வாழ்க்கை அர்த்தமற்ற கானலின் தேடல் எனக் காட்டப்படுகிறது.

பிச்சைக்காரனின் அறியாமையை வைத்துக்கொண்டே நமது வாழ்க்கைக்கும் அர்த்தம் பிழையாகக் கற்பிப்பதை விட, அலனுக்கு உண்மையைக் கூறி, அதைத் தாங்கிக் கொண்டும் மனத்தைரியத்தையும் ஏற்படுத்தி அவனை வழியனுப்பி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.

இப்படி எழுதியிருந்தால் ஒரு வேளை சிறுகதை எழுதப்படாமல் போயிருக்கலாம். அல்லது அப்படி அமைந்தால் அது சிறுகதைக்குரிய உருவத்தையும் கலையையும் எடுக்காமல் போயிருக்கலாம் ஆனால் இன்னும் ஆழமான கலைஞன், இத்தகைய புது வடிவத்துக்குரிய கலையுருவத்தையும் கண்டே இருப்பான்.
ஆனால் குணதாஸ அமரசேகர அப்படிச் செய்யவில்லை மாறாக தன்னையும் பிறரையும் இக்கதை மூலம் மாறாட்டத்துக்குள் ஆழ்த்தியிருக்கிறார். இப்படிச் செய்வதைவிட உண்மையைக் கூறி (நாய் செத்துவிட்டதென்ற உண்மை), ஒரு பிச்சைக்காரனின் வாழ்க்கையில் வீரத்தையும் கலையையும் வளர்க்கலாமே!

# வாழ்க்கை என்றால் என்ன?

வாழ்க்கை ஓர் போட்டி — அதைச் சந்தியுங்கள்
வாழ்க்கை ஓர் கொடை — அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஓர் துணிகரச் செயல் — எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஓர் சோகம் — வெற்றி கொள்ளுங்கள்
வாழ்க்கை விசனகரமானது — எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஓர் கடமை — செய்து முடியுங்கள்
வாழ்க்கை ஓர் விளையாட்டு — ஆடுங்கள்
வாழ்க்கை ஓர் மர்மம் — விடுவியுங்கள்
வாழ்க்கை ஓர் பாட்டு — பாடுங்கள்
வாழ்க்கை ஓர் தருணம் — பயன்படுத்துங்கள்
வாழ்க்கை ஓர் பிரயாணம் — முடியுங்கள்
வாழ்க்கை ஓர் வாக்குறுதி — நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஓர் அழகு — போற்றுங்கள்
வாழ்க்கை ஓர் அன்பு — அனுபவியுங்கள்
வாழ்க்கை ஓர் ஆத்மா — உணருங்கள்
வாழ்க்கை ஓர் போராட்டம் — போராடுங்கள்
வாழ்க்கை ஓர் மயக்கு — விடுவியுங்கள்
வாழ்க்கை ஓர் குறிக்கோள் — அதை அடையுங்கள்

தொகுப்பு;- க. கனகராசா J.P

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் அண்ணாவுக்கு தோள் கொடுத்தேன்

சிதம்பரம் நகரசபை முற்றத்தில் நான்கு சதுர மேடைபோட்டு ஒரு கூட்டம் நடந்தது. அதில் அறிஞர் அண்ணாவும் பேசுவதாக விளம்பரப்படுத்தியிருந்தார்கள். சிறந்த பேச்சாளரைக் கண்டு கேட்கும் தாகத்தில் இருந்த நான் அண்ணாமலை நகரில் இருந்து இரவு ஏழு மணிபோல் சிதம்பரம் சென்று அக்கூட்டத்தைக் கேட்டேன்.

அண்ணா அழகு தமிழில் ஆற்றொழுக்காய் சொற்பெருக்காற்றினார். கேட்டாரைப் பிணிக்கும் சொற்பொழிவு அது. அவருடைய பேச்சுக்குப் பின்பு கூட்டம் கலைந்து சென்றது. எல்லோரும் அவசர அவசரமாகத் திக்குதிக்காய்ப்போனார்கள். மேடையில் எழுந்து நின்ற அண்ணாவை நான் அண்ணாந்து பார்த்தபடி நின்றேன். அண்ணா மேடையை விட்டுக் கீழே இறங்க ஆயத்தமானார். யாரையாவது பற்றிக்கொண்டு கீழ் இறங்க வேண்டும். அப்போது அவருக்கு அருகில் எவரும் இல்லை அண்ணாந்தபடி நின்ற என்னைப்பார்த்துக் கிட்டே வரும்படி கையசைத்தார். நானும் மேடைக்கருகில் சென்று நின்றேன். என்னைப்பற்றிக் கொண்டு கீழே குதித்தார்.

நான் அவரோடு உரையாட வாயெடுத்தேன். அவர் தனது காருக்குள் எட்டிக் காலைவைத்து ஏறிக் கொண்டார். கார்கனகதியில் புறப்பட்டு வடுகநாதன் தியேட்டர் பக்கமாய் திரும்பியது. திகைத்து நின்ற என்னைப்பார்த்து சிரித்தபடி அண்ணா கையைக் காட்டிக்கொண்டு போனார்.

(இது நடந்தது 1964ம் ஆண்டில் அவர் ஆட்சியில் இல்லாத போது. (புரட்டாசி 15ம் நாள் அண்ணாவின் பிறந்த நாள். அன்று அவரை நினைத்த போது..)

- புலவர்

## எனப்பிரிய காணமே!

அடி!
மார்கழி வீதியில்
மட்டுமே...
திருப்பாவை
திருவெம்பாவை
பள்ளியெழுச்சியாகிறது...
எனது வீதியில்
பாவையே... நீ
எல்லா மாதங்களிலுமல்லவா
பள்ளியெழுச்சி செய்கிறாய்
எனக்கென்றே
எழுதப்பட்ட
திருப்பாவையே!
நீ...
ஒரே பாடல் ஆனாலும்
உன்னுள் தான்
எத்தனை
பாடல்கள்!
உலகம் ஒன்று என்றாலும்
உலகத்துள் தான்
எத்தனை
உயிர்கள்!
அப்படித்தானா
நீயும்...?!

கே.அறிவுமதி

# அமைதியான நினைவும் செயலும்

நொடிப்பொழுதுகள், சொற்கள் வாழ்த்துக்கள், உணவுகள், உடைகள், கடிதத் தொடர்பு, இளைப்பாறுதல், வேலை, தனிப்பட்டமுயற்சிகள், விரைந்த கடமைகள் கருத்துச் செலுத்துவதற்குரிய இன்னும் ஆயிரக் கணக்கான புல்லிய செயல்களில் - சுருங்கச் சொன்னால் வாழ்வின் பொதுப்படையான சில்லறைச் செயல்களில் பொதிந்துள்ள பெரும் மதிப்பைப்பற்றி பெரியோன் அறிகிறான்.

ஒவ்வொன்றும் தெய்வத்தால் வகுக்கப்பட்டிருப்பதாய்க் காண்கிறான். வாழ்நாளை இன்பமுள்ளதாகவும், நிறைவுள்ளதாகவும் செய்யும் பொருட்டு அமைதியான நினைவையும் செயலையும் பயன்படுத்துவதுதான் இன்றியமையாததெனவும் அவன் காண்கிறான்.

அவன் ஒன்றையும் புறக்கணிப்பதில்லை; பதற்றப்படுகிறதில்லை. தப்புத்தவறுகளைத் தவிர மற்றொன்றையும் விட்டுவிலக வழிதேடுகிறதில்லை.

தனக்கென அமைக்கப்படுகிற ஒவ்வொரு கடமையையும் நிறைவேற்றுகின்றான், அதை நிறுத்தி வைக்கிறதுமில்லை, அதற்காக வருந்துவதும் இல்லை.

தன்னையடுத்த கடமையைத் தாழ்ச்சியின்றிச் செய்யத்தலைப்படுவதால், குழந்தையின் கள்ளமின்மையும், தானறியாதடைந்த வல்லமையையும் ஒருங்கே அடைகின்றான். இதுவே பெருமையாகும்.

-ஜேம்ஸ் ஒலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973ம் ஆண்டு நான் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாக இருந்தேன்.

இரண்டாம் வருடமாணவனாகிய என்னுடன் 50 பேர் படித்தார்கள். எல்லோருமே என்னைப் போலவே இளைஞர்கள் என்பதால் மகிழ்ச்சிக்கும் விளையாட்டுக்கும் குறைவிருக்கவில்லை.

காலை 7.30 முதல் மாலை 3.30 வரை படிப்பு/ பின்பு 6.00 மணிவரை விளையாட்டு/ 6 மணி முதல் நித்திரைக்குப் போகும் வரை பாட்டும் கூத்தும்தான்/ பெரும்பாலானவர்கள் கல்லூரி விடுதியில் தங்கியிருந்ததால் தினமும் மகிழ்ச்சிதான்

என்னுடன் படித்த ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு ரகம்/ சிலர் தனித்தனியே இருப்பார்கள் சிலர் கூட்டம் கூட்டமாக இருப்பார்கள்.

நானும் தர்மலிங்கம் என்னும் ஆசிரிய மாணவனும் நெருங்கிய நண்பர்கள்./ எங்கள் நோக்கமெல்லாம் ஒரு நிகழ்ச்சியைப் பற்றியே இருந்தது./ அடுத்த வாரம் புதிய மாணவர்கள் வரப்போகிறார்கள்./ அவர்களை எப்படி றக் பண்ணுவது என்பதுதான் எங்கள் சிந்தனை.

# உண்மை அனுபவம்

இலங்கேஸ்வரன்

இரண்டாம் வருட மாணவர்கள் சிலரை நாம் துணைக்கு வரவழைத்துக் கொண்டோம்.

நாம் எல்லோரும் ஒரு முடிவுக்கு வந்தோம்.

புதிதாக வரும்மாணவர்களில் முரட்டுமாணவர்களை றக்பண்ணுவதற்குப் பொறுப்பாக தர்மலிங்கம் இருந்தான்./ அப்பாவி மாணவர்களை றக்பண்ணுவதற்கு நான் பொறுப்பாக இருந்தேன்./ எங்கள் இருவருக்கும் இரண்டாம் வருடமாணவர்கள் பலர் உதவிக்கு வந்தார்கள்.

அந்தநாள் வந்தது./ ஆம்! புதிய மாணவர்கள் கலாசாலைக்கு வரும்தினம் தான் அது./

காலையில் வந்த புதியமாணவர்கள் படிப்பு முடிந்து; மாலை 4.00 மணிக்கு எங்கள் விடுதிக்கு வந்தார்கள்./ ஆம் எங்கள் கைகளில் அகப்பட்டார்கள்.

அங்கு வந்த புதியமாணவர்களை வடித்தெடுத்து அப்பாவி மாணவர்களை என்னிடம் அனுப்பினார்கள்./ அந்த அப்பாவிமாணவர்களில் கால் ஊனமுள்ள ஒரு நொண்டிமாணவனும் வந்தான் அவனது பெயர் சித்திரவேலு

மாலை 6.00 மணிக்கு முதலாம் வருடமாணவர்கள் எல்லோரையுமே விளையாட்டு மைதானத்துக்கு வரவழைத்தோம்.

தங்கள் உடுப்புப் பெட்டிகளை தலையில் வைத்துக் கொண்டு வரவேண்டும் என்றோம்./ எல்லோரும் தமது உடுப்புப் பெட்டிகளை தலையில் சுமந்தவாறு விளையாட்டு மைதானத்துக்கு வந்தார்கள் நொண்டி மாணவன் சித்திரவேலுவும் தனது உடுப்புப் பெட்டியை தலையில் வைத்துக்கொண்டு நடக்க கஷ்டப்பட்டான்

உடனே அவனை அழைத்து, நீ உடுப்புப் பெட்டியை தலையில் வைக்கத்தேவையில்லை ஒருபக்கத்தில் இருந்துகொள் என்றேன். அவன் நொண்டிய வாறே ஒரு பக்கத்தில் அமர்ந்துகொண்டான்.

இப்படியே முதலாம் வருடமாணவர்கள் பலருக்கு றக்கிங் என்றபெயரில் பல தொல்லைகளைக் கொடுத்தோம்./ நொண்டி மாணவன் சித்திரவேலுவுக்கு மட்டும் எந்தவித தொல்லைகளும் கொடுக்கவில்லை. அவன் அமைதியாகவே இருந்துகொள்வான். அவன்மீது உள்ள அனுதாபம் காரணமாக அவனுக்கு எந்த வேலையுமே கொடுப்பதில்லை.

ஒரு வாரத்துக்குப்பின். றக்கிங் எல்லாம் முடிவுற்று ஒரு விழா வைப்போம் அவ்விழாவிலே புதிய மாணவர்கள் தம்மை மேடையில் அறிமுகப்படுத்திக் கொள்வார்கள் அதன்பின்பு அவர்களை எவரும் றக் பண்ணமாட்டார்கள் புதிய மாணவர்களுக்கான றக்கிங் எல்லாம் முடிவடைந்து, அவர்களை அறிமுகப்படுத்தும் விழா நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு நானே தலைமை தாங்கினேன்.

மேடையில் இருந்தவாறே நான் அழைக்கும் புதிய மாணவர்கள் மேடைக்கு வந்து தம்மை அறிமுகப்படுத்திவிட்டு, இறங்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். நொண்டி மாணவனின் பெயரை நான் அழைத்தேன். அடுத்து சித்திரவேல் தன்னை அறிமுகப்படுத்துவார் என்றேன்.

சித்திரவேல் கதிரையில் இருந்து எழுந்து மேடைக்கு வந்தான். எல்லோருமே அவனது நடையைப்பார்த்து அதிர்ந்து போய்விட்டார்கள். காரணம் எப்பொழுதுமே நொண்டி நொண்டிச் செல்லும் அவன் இப்பொழுது நிமிர்ந்து கெம்பீரமாக நடந்து மேடையில் ஏறி தன்னை அறிமுகப்படுத்தினான். அவன் பேசினான் 'இங்கு பழைய மாணவர்கள் புதிய மாணவர்களை றக்பண்ணினார்கள் ஆனால் புதிய மாணவனாகிய நான் பழைய மாணவர்களை றக்பண்ணிவிட்டேன். எனக்கு கால்நொண்டி இல்லை. ஒரு வாரமாக நொண்டியாக நடித்தேன்' என்று கூறி முடித்துவிட்டு கெம்பீரமாக இறங்கினான் என்னைப் போலவே எல்லா மாணவர்களும் முகத்தின் மீது கைவைத்தார்கள்.

(பெயர்கள் மட்டும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பனில் வாழ்வியல் விழுப்பொருள்கள்

பேராசிரியர்
அ. ச ஞானசம்பந்தன்

ஒரு மொழியில் ஆழமான பல்பொருளுடைய ஒரு சொல்லை மற்றொரு மொழியில் பெயர்த்தல் கடினம் என்பதை அத்துறையில் முயன்றவர்கள் நன்கு அறிவர். தமிழில் உள்ள அறம் என்ற சொல்லை வடமொழியிலோ ஆங்கிலத்திலோ பெயர்த்தல் இயலாத காரியம். அதேபோல (Values) என்ற ஆங்கிலச் சொல்லும் பெயர்க்கக் கடினமாக உள்ளது, எனினும் 'விழுப் பொருள்கள்' என்று கூறலாம் என்று கருதுகிறேன்,

ஒரு சொல் எவ்வாறு பொருள் ஆழம் பெறுகிறது என்பதைக் கூறவந்த அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஆலிவர் வெண்டால் ஹோம்ஸ் என்ற இலக்கியத் திறனாய் வாளர் பின்வருமாறு கூறுகிறார். A word is not a crystal transparent and unchanged it is the skin of a living thought and may very greatly in colour and content according to the circumstances and the time in which it is used,—Justice O. W. Holmes, TOWNE Vs EISNE..

ஒருசொல் என்பது வைரம்போன்று ஒரே மாதிரியாக என்றும் ஒளிவிட்டுக் கொண்டிருப்பதன்று. எண்ணங்கள் என்பவற்றின் உயிரோட்டமுடைய தோலாகும் சொல் என்பது. அது தோன்றும் 'நேரம் இடம் என்பவற்றிற்கேற்பச் சொல்லின் பொருள் மாறுபடும் இயல்புடையது' என்கிறார் ஹோம்ஸ்.

ஒருவன் ஒரு சொல்லைப் பயன்படுத்தினால் அது ஆயிரம் ஆண்டுகளாக வழங்கப்பெற்ற சொல்லாக வின் அத்தனை பொருள் வேறுபாடுகளுடன் கேட்பான் செவியில் புகுகின்றது. இத்தனை பொருளையும் அந்தச் சொல் நேரே தெரிவிக்காவிடினும் குறிப்பால் உணர்த்தும் (Suggestion) இயல்புடையது. Values என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'That which is esteemed for its own sake' என்று ஆக்ஸ்பர்ட் அகராதி பொருள் கூறுகிறது. அதாவது வேறு பயன் ஒன்றையும் கருதாமல் எந்த ஒன்றை அதற்காகவே பெரிதும் போற்றி உயிரினும் மேலாக மதிக்கிறோமோ அதைத்தான் (Values) விழுப்பொருள்கள் என்று கூறுகிறோம். விழுப்பொருள்கள் என்று கூறியவுடன் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திலிருந்து மாறாமல் இவை இருக்க வேண்டும்போலும் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. விழுப் பொருள்களுள் மாறும் இயல்புடையவும் (Changing Values) மாறாத இயல்புடையவும் (Permanent Values) உண்டு. சென்ற நூற்றாண்டில் விழுப்பொருள்கள் என்று இத்தமிழரால் கருதப்பெற்றவை இன்றும் அவ்வாறே கருதப் பெறவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. அதேபோல ஒரு சமுதாயத்தாரால் விழுப்பொருள்கள் என்று கருதப்படுபவை அதேகால கட்டத்தில் பிற சமுதாயத்தாரால் விழுப்பொருள்களாகக் கருதப்படத் தேவை இல்லை. தமிழர் களாகிய நமக்கு விழுப்பொருள்களாக உள்ளவை ஆந்திரர்க்கோ, வங்காளிகட்கோ அவ்வாறே இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இவை சமுதாயத்தைப் பொறுத்தவை.

அதேபோன்று தனி மனிதனாகிய நான் விழுப்பொருள்கள் என்று கருதுவனவற்றையே என் உடன் பிறந்தவனும் ஒன்றாகக் கருதவேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒரே மனிதன் கூட இன்று விழுப்பொருள் என்று கருதுவதை இன்னுஞ் சில ஆண்டுகள் கழிந்து அப்படியே அதனைக் கருதவேண்டும் என்ற தேவையும் இல்லை.

Nallur Branch Library

உலக இலக்கிய கர்த்தாக்கள் அனைவரினும் மேம்பட்டு நிற்பவனாகிய கம்பநாடன் தனிமனிதனுக்குரிய பல்வேறு விழுப்பொருள்கள் ஆகிய பலவற்றையும் எடுத்துக்காட்டிச் செல்கிறான். தனி மனிதனுக்குரிய விழுப்பொருள்களிலும் பல வேறுபாடுகள் உண்டு. தசரதன் பிள்ளைகளாகிய இராம இலக்குவர்கள் என்று எடுத்துக்கொண்டாற்கூட இருவருடைய விழுப்பொருள்களும் வேறுவேறு. விழுப்பொருள்கள் வேறாக இருத்தலின் ஒருவருக்கொருவர் காட்டவேண்டிய அன்பில் குறைபாடிருக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. ஒரே மனிதன்கூடச் சூழ்நிலையும் அடிப்படையும் மாறும்போது பழைய விழுப்பொருளை உதறிவிட்டுப் புதியனவற்றை ஏற்றுக் கொள்கிறான்.

ஜனகனிடம் இராம இலக்குவர்களை அழைத்துச் செல்கிறான் விசுவாமித்திரன். பெண்ணைப் பெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கட்கு, இளைஞர்கள் யாரைக் கண்டாலும் தம் மகளுக்கு ஏற்ற மணாளனாக இவன் அமைவானா என்ற எண்ணம் உண்டாவது இயற்கை தானே! எனவே தான் விசுவாமித்திரன் 'நின் வேள்விகாணிய வந்தார்! வில்லும் காண்பார்' என்று கூறுகிறான். இடையே இவர்கள் யார் என்று அறிமுகப்படுத்தும் முறையில் தசரதனுடைய பிள்ளைகள் இவர்கள் என்பதைத் தெரிவிக்கிறான் முனிவன். இதனைக் கேட்டவுடன் எதிர்கால மாமனாராகிய ஜனகன் மனத்தில் ஓர் ஐயம் தோன்றத் தானே செய்யும்? அறுபதினாயிரம் மனைவியரைத் தந்தை மணந்தான் எனில் அவன் பிள்ளை எப்படி இருப்பானோ என்ற ஐயம் தோன்றுவது இயல்புதானே! அதற்கும் விடையளிக்கும் முறையில் முனிவன் பேசத் தொடங்குகிறான். பெற்ற கடமைதான் தசரதனுக்கே தவிர, உபநயன விதி முடித்து வில்வித்தை முதலிய கலைகளைக் கற்றுத் தந்தவன் வசிட்டனே காண்' என்று கூறி முடிக்கிறான். முதற் காப்பியத்தில் சொல்லப்பட்ட முறையை மாற்றிவிடுகிறான் கம்பநாடன். பல மனைவியர் இருப்பதில் தவறு இல்லை என்பதைப் பழைய காப்பிய காலத்தில் விழுப்பொருளாகக் கருதப்பட்டிருந்தது. கம்ப நாடன் இலக்கிய காப்பியம் அந்த விழுப்பொருளை (Values) உதறிவிட்டுப் புதிய விழுப்பொருளை மேற்கொண்டுவிட்டது. ஒரு தாரமே சிறந்தது என்பது புதிய விழுப்பொருள்.

தனி மனிதனுடைய விழுபபொருளைக்கூறும் பொழுது கூடச் கவிஞன் அந்தத் தனி மனிதனுடைய கல்வி, ஒழுக்கம், பண்பாடு, குடிப்பிறப்பு என்பவற்றிற்கேற்பவே விழுப்பொருளை அமைக்கிறான். காடு செல்ல முடிவு செய்த இராமன் தன் செல்வத்தைத் தானம் செய்கிறான். அதனைப் பெற்றுக்கொள்ள வந்தவர்களுள் கிழட்டு அந்தணன் ஒருவன். பசுக்களைத் தானமாகப் பெற வருகிறான் அவன். எவ்வளவு பசுக்கள் வேண்டும் என்று கேட்கப்பட்ட பொழுது தனது கைத்தடியைச் சுழற்றி எறிந்து அது எவ்வளவு தூரம் செல்லுமோ அந்த அளவு பசுக்கள் வேண்டும் என்று கூறி விட்டு அந்தக் கிழவன் மிக முயன்று கம்பை எறிகிறானாம். அவன் ஆசைக்கு அளவில்லை. உள்ளவை அனைத்தையும் வழங்க முற்படும் இராமனும் அளவிலா ஆசை கொண்ட கிழட்டு அந்தணனும் அயோத்தியிலேயே ஒரே காலத்தில் வசித்தவர்கள்தாம்; ஆனால் இருவருடைய வாழ்க்கையிலும் எவ்வளவு மாறுபட்ட விழுப்பொருள்கள்!

கிழட்டு அந்தணனும், இராகவனும் சமுதாயத்தின் இரு துருவங்கள் போன்று இரண்டு முனைகளில் உள்ளவர்கள் அவர்களுக்குள் ஓர் ஒற்றுமையைக் காண்பது கடினம். ஆனால் ஒரே வீட்டில் அண்ணன் தம்பியாகப் பிறப்பவர்களுக்கும் ஒத்த குலம், ஒத்த கல்வி, ஒரே தாய் தந்தையர். என்றாலும் என்ன? அவரவர் வாழ்க்கையில் எவ்வெவற்றை வேல்யுஸ் என்று கொண்டார்கள் என்று பார்த்தால் உண்மை விளங்கும். இராமனும் இலக்குவனும் அண்ணன் தம்பியர்தாம்! இவர்கள் இருவரும் கொண்டிருந்த விழுப்பொருள்கள் வெவ்வேறு அன்றோ! இராமனைப் பொறுத்தமட்டில் அறம் ஒன்றே அவனுக்கு விழுப்பொருள்! அறத்தின் எதிரே தாய், தந்தை மனைவி, ஆகிய அனைவரும் தாழ்ந்த உறவுகளே! ஆனால், இலக்குவனுக்கோ விழுப்பொருள் வேறு இராம பக்தி என்ற ஒன்றுதான் அவன் கொண்ட விழுப்பொருள். அதன் எதிரே தாய், தந்தை, சோதரன் ஆகிய அனைவரும் ஒதுக்கப்பட வேண்டியவர் இந்த இருவரும் கொண்ட தனித் தனியான விழுப்பொருள்களை நன்கு எடுத்துக்காட்டி அந்த விழுப்பொருளுக்காக அவர்கள் எந்தத் தியாகத்தையும் செய்யத் தயாராக உள்ளனர் என்பதையும் கவிஞன் விரிவாகக்கூறுகிறான்.

இனி, ஒருவன் தன் வாழ்நாளில் கொண்டிருக்கும் விழுப்பொருளை, ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட காரணத்திற்காக மாற்றிக்கொள்வதும் உண்டு. காரணம் அந்தக் குறிப்பிட்ட காரணம், தான் அதுவரை கொண்டிருந்த விழுப்பொருளை விட உயர்வானது என்பதுதான்: காந்திஜி அஹிம்சையை உயிரினும் மேலாக மதிப்பவர், பசுப்பாதுகாப்பைப் போற்றுபவர். என்றாலும் இங்கிலாந்தில் ஒருமுறை ஜின்னாவை உணவுக்கு அழைத்தார்; விருந்தினராக வந்த ஜின்னாவுக்கு மகாத்மா என்ன உணவைத் தந்தார் தெரியுமா? தாம் உண்ணும் வேர்க்கடலையை அல்ல. பசு மாட்டுக் கறியைத் தந்தார். இதன் உட்பொருளை அறியாத மக்கள் அவரைக் குறை கூறினர். ஆம்! பல சமயங்களில் ஒருவர் கொண்டிருக்கிற விழுப்பொருளை மாற்றிக் கொள்ளவேண்டும். மாற்றிக்கொள்வதற்குத் தகுத்த காரணமும் இருக்கவேண்டும்.

இந்த அற்புதமான கருத்தும் கம்பனில் இடம் பெறுகிறது. விசுவாமித்திரனுடன் காட்டிற்குச் செல்கிறான் இராமன், காட்டில் தாடகை எதிர்ப்படுகிறாள். அழைத்துவந்த விசுவாமித்திரன் அவளைக் கொல்லவேண்டும். என்னும் குறிப்பை அறிவித்தாலும் இராமன் கணையைத் தொடுக்கவில்லை. காரணம் 'பெண் என மனத்திடை பெருந்தகை நினைத்தான்' (தாட, வதை - 36) வசிட்டனிடம் கல்வி பயின்ற இராமனுக்கு ஒரு பெண்ணின் மேல் அம்பு போடுதல் என்பது நினைக்கவும் முடியாத செயலாகும். எக்காரணம்பற்றியும் பெண்ணின் மேல் அம்பு விடலாகாது: அதுவே தூய வீரத்திற்கு இலக்கணம் என்பது இராமன் கொண்டிருந்த விழுப்பொருளாகும். ஆனால் இப்பொழுது தருமசங்கடமான நிலைமை. தான் யாரைக் குரு, தந்தை, தெய்வம் என்று இராமன் இப்பொழுது கொண்டுள்ளானோ அந்த விசுவாமித்திரன் இதோ பேசுகிறான்:

'ஈறுஇல் நல் அறம் பார்த்து இசைத்தேன்: இவன்
சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்;
ஆறி நின்றது அற்ற அன்று; அரக்கியைக்
கோறி என்று எதிர் அந்தணன் கூறினான்'

(கம்பன் - 382)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக விரிவாகப் பேசுகின்ற முனிவன் இரண்டு வலுவான காரணங்களை எடுத்துக் கூறுகிறான். முதலாவது 'முடிவில்லாத தல்ல அறத்தை நன்கு ஆராய்ந்து பார்த்துத் தான் இந்த முடிவுக்கு வந்தேன்' என்பதாகும். அப்படியானால் அறம் பெண்ணைக் கொல்லலாம் என்று பேசுகிறதா? என்ற வினாத் தோன்றுமல்லவா? அதற்கு விடை கூறுபவன் போல முனிவன் 'பின்னும் தாழ்குழல் பேதைமைப் பெண் இவள் என்னும் தன்மை, எளிமையின் பாலதே' (தா. வ, 43) என்று கூறிவிடுகிறான். அதாவது பெண்மை என்பது கேவலம் உடலைமட்டும் பொறுத்தது அன்று; தாய்மைத் தன்மை இல்லாத தாய் பேய் என்று எணணத் தகுந்தவள். எனவே பெண் கொலை பாவம் என்ற அறத்தை அப்படியே குருட்டுத்தனமாகப் பின்பற்றக்கூடாது என்பதே முலிவன் வாதமாகும். பொதுவான அறம் பெண் கொலை கூடாது என்பதாகும். நல்லறம் என்பது அவள் பெண்ணாக இல்லையானால் அவளைக் கொல்ல வேண்டும் என்பதே.

இதற்கு அடுத்தபடியாக ஒரு விழுமிய கருத்தைப் பேசுகிறான் முனிவன்.

இராமா! அறம் எது அறமல்லது எது என்ற ஐயம் தோன்றி ஆராய்ச்சியில் இறங்குபவனுக்கு மனத்தில் மாசு இருக்கக்கூடாது. விருப்பு வெறுப்பு உடையவன் நடுவு நிலையில் நின்று ஒன்றை ஆராய முடியாது. நான் இவள்பால் கொண்ட வெறுப்புணர்ச்சியால் இவ்வாறு பேசுகிறேன் என்று எண்ணாதே! நடுவுநிலையில் நின்று விருப்பு வெறுப்பைக் கடந்த நிலையில்தான் இந்த முடிவுக்கு வந்தேன் என்று கூறு முகமாக 'இவள் சீறி நின்று இது செப்புகின்றேன் அலேன்' என்றும் கூறுகிறான். மனத்தில் காழ்ப்புணர்ச்சி இல்லாதவர் எடுக்கின்ற முடிவில் நியாயம் உறுதியாக இருந்தே தீரும், இராமனுடைய எண்ண ஓட்டங்களை நன்கு அறிந்துகொண்ட முனிவன் தாடகையைக் கொல்லுமாறு தான் பணித்தது அறத்திற்கு மாறுபட்டதன்று என்பதையும், அறம் எது என்று ஆராயும்பொழுது தன் மனத்தில் காழ்ப்புண்ர்ச்சி இல்லை என்பதையும் நடுவுநிலையில் நின்றே இந்த முடிவுக்கு வந்திருக்கிறான் என்பதையும் மிக ஆணித்தரமாகவும் அழுத்தமாகவும் கூறி வீட்டான்.

இப்பொழுது இராமன் தருமசங்கடமான நிலையில் அகப்பட்டுக் கொள்கிறான். விசுவாமித்திரன் எத்துணை சிறந்த முனிவனாயினும் அவன் தாடகையால் தீங்கு இழைக்கப் பட்டவன் (affected party) என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. தவறு இழைக்கப்பட்டவன் மனம் காழ்ப்புணர்ச்சியை முற்றிலும் தவிர்க்க முடியுமா என்பது வினா? இதனை முடிவு செய்தல் அத்துணை எளிதான காரியமன்று. எனவே இராமன் மற்றொரு வழியைக் கையாள முற்படுகிறான். விசுவாமித்திரனைக் குரு என்றும் வழிபாட்டிற்கு உரியவன் என்றும் மனத்துட் கொண்டு விட்ட பிறகு அவனைப்பற்றியும், அவன் மனநிலை பற்றியும் ஆராயத் தொடங்குவது பெருந் தவறாக முடியும். எனவே அவன் கூறியதை ஏற்பதே முடிவு என்ற நிலைக்கு வருகிறான் இராமன்.

தன் மனமாற்றத்தைக் கூறத் தொடங்கிய இராகவன் மிகக் கவனத்துடன் பேசுகிறான். 'ஐயனே' அறம் அல்லாததைச் செய்க என்று நீயே ஏவினால் நின் சொற்களை வேதம் என்று கொண்டு செய்வதே எனக்கு அறமாகும்' என்ற பொருளில்

'ஐயன் அங்கு அதுகேட்டு, 'அறன் அல்லவும்
எய்தியார், 'அது செய்க' என்று ஏவினால்
மெய்ய! நின் உரை வேதம் எனக்கொடு
செய்கை அன்றோ! அறம் செயும் ஆறு என்றான்.'
(கம்பன் - 83)

என்று கவிஞன் இராமனைப் பேச வைக்கின்றான். இதுவரை இராமன் எதனை விழுப்பொருள் என்று கொண்டிருந்தானோ அதனை மாற்றிக்கொள்ள முடிவு செய்துவிட்டான், பெண்ணைக்கொல்லுதல் என்பது எப்பொழுது? தானே அந்த முடிவை மேற்கொண்டால் அது அவனுடைய விழுப்பொருளின் படி தவறுதான். ஆனால் இராமனுடைய பிற விழுப்பொருள்களில் தாய், தந்தை, குரு, தெய்வம் என்றவர்கள் ஏவியதை உடனடியாகச் செய்ய வேண்டும். என்பது தலையாய விழுப்பொருளுமாகும்... இராமன் மேற்கொண்டிருந்த இவ்விரு விழுப்பொருள்களுள் (Values) முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது. இவை இரண்டின் இடையே உள்ள தார தம்மியங்களை ஆராய்ந்த இராமன் இறுதியாக ஒன்றை எடுத்துக்கொண்டு ஒன்றை விட்டு விடுகிறான்.

'அறன் அல்லவும் எய்தினால் 'அது செய்க' என நீ ஏவினால்' என்று கூறும்பொழுது இராமனுடைய மனப் போராட்டத்தை அறிய முடிகிறது. அறம் அல்லது எய்தாது என்பதை எய்தினால் என்று ஒரு ஆல் தருகிறான். மேலும் அது செய்க என நீ ஏவினால் என்று கூறும்பொழுது நீ ஏவமாட்டாய் என்ற பொருளும் அதில் தொக்கி நிற்கிறது. எது அறம்? பெண்ணைக் கொல்லக்கூடாது எனபது பொதுவான அறம் அல்லது சட்டம். நீண்ட காலமாக எழுத்தில் உள்ள இந்தச் சட்டத்தின் மாறுபட்டு இப்பொழுது ஒரு நீதிபதி தீர்ப்பளிக்கின்றார். அவர் யார்? ஓர் உலகத்தையே தன் தவவலிமையால் படைக்கும் பேராற்றலும் பேர் அறிவும் உடைய பெருமகன் எனவே எழுதப்பெற்ற சட்டத்தை விளக்கும் தகுதியும் (Capacity to interpret written law) ஆற்றலும் உடைய விசுவாமித்திரன் அந்தச் சட்டத்திற்குப் புதிய விளக்கம் தருகிறான், என்ன புதுமை? பெண் உடம்பை மட்டும் வைத்துக் கொண்டு குருட்டுத்தனமாகப் பெண் என்று முடிவு செய்துவிடக்கூடாது என்பது விசுவாமித்திரன் தந்த புது விளக்கம் 'பெண்

24ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வேறு பார்வைகள்

## சிறுகதை

**கெக்கிறாவ ஸகானா**

மணி மூன்றரை. அருணுக்கும் பாலைக் கலந்து எடுத்துக் கொண்டு முன் ஹோலுக்கு வந்தேன். அருண் குப்புறப்படுத்து, நான் சொல்லிக்கொடுத்த பாடல் உள்ள பக்கத்தைப்பிரித்து, புத்தகத்தில் சாய்ந்திருந்தான். என்னைக்கண்டு ஒரு பூஞ் சிரிப்பை உதிர்த்து நிமிர்ந்தான் அவனுக்கு மூன்று வயது.

''அருண் பாட்ட சொல்லும்மா......'' நான் அவனருகே உட்கார்ந்து ஃபீடிங்கப்பை நீட்டினேன். வாங்கிக்கொண்டவன் சற்று நகர்ந்து என் மடியில் படுத்து, சொன்னான்.

''ரெய்ன் ரெய்ன் கோ எவே, ரம் எகய்ன்......''

''இல்லம்மா! கம் எகய்ன்டு சொல்லு......!''

''சரி... கம் எகய்ன்... ஏன் சித்தி... அப்புடின்டா என்னா'' அருண் என் கழுத்தைக் கட்டிக் கொண்டன்.

நான் வாயைத் திறக்குமுன் அடுத்த வீட்டிலிருந்து இடிமுழக்கம் போல் ஒரு அதிர்வு...! ஜன்னலுக்கூடாக பார்வையைத் திருப்பினேன்.

''ஏன்டி! மூதேசிகளா ...... என்னா இது கூத்தும், கும்மாளமுமா...... ரேடியோ இல்லாட்டி வேல ஓடாதோ கழுதைகளுக்கு......'' ரவீந்திரன் கோபாவேசத்தோடு அலறுகிறான். அவனது வலது கை மட்டுமே தெரிகிறது. எதையோ எடுத்து ஓங்கி வீசுகிறான். கீழே உட்கார்ந்திருந்தயாரோ ஒருத்தியின் மீது — மூன்று பெண்களில் ஒருத்தி மீது அது பட்டிருக்க வேண்டும். கீச்சுக்குரலில் மீண்டும் ஒரு பெண்ணின் அலறல். தொடர்ந்து மெல்லிசாய் பாடிக்கொண்டிருந்த வானொலி நிற்கிறது.

அருண் என்னை இறுகக் கட்டிக் கொண்டான். ''சே! என்ன மனுஷர் இதுகள்......! ஒருத்தர் மாத்தி ஒருத்தர் எப்ப பாத்தாலும் கத்திக் கொண்டுதான் அக்கம் பக்கத்துல மனுஷர் நிம்மதியா கொஞ்சநேரம் இருக் முடியாம இருக்கே......!''

முணுமுணுத்தபடியே அவனை அள்ளிக்கொண்டு முன்புறம் போனேன். திண்ணையில் உட்கார்த்திவைத்து பாலைக் குடிக்கக் கொடுத்தேன். குடித்துக் கொண்டிருந்தவன் இடையில் கேட்டான்.

''அம்மா எப்ப வரும் சித்தி...''

''இப்ப வரும்......''

ஆமாம்! ஏன் சுணங்குகிறார்கள் என சட்டென யோசனை வந்தது. ரொம்ப சந்தோஷமா பொறப்புட்டாங்க; திரும்ப மனசில்லையோ, என்னவோ? கதை கதையா பேசுறாங்களோ...? - கிலுகிலுப்பான புன்சிரிப்பொன்று என்னைமீறி இதழ்களை ஈரமாக்கிற்று;

நானே பகல் உணவின் போது அக்காவிடம் பேசி இருவரையும் வெளியே அனுப்பி வைத்தேன். அருணை வைத்துக் கொண்டேன். துணைக்கு சாலாட்சி?

அத்தான் தூரத்துல போயி இப்புடி வேல பாக்குறதால தானே இந்தளவு ரெண்டுபேரும் ஃபீல் பண்றாங்க...? பாவம்!

திடுமென எங்கிருந்தோ முளைத்தெழுந்தது என் நினைவு ஆமாம் என் வாழ்க்கை எப்படி இருக்கப் போகிறதோ..? அக்காவைப் போலவே சந்தோஷமாக இருப்பேனா..? இல்லை, அவளைவிடவும் நன்றாக...?

கமலஹாசன் மாதிரி ஒரு மாப்பிள்ளை, கௌரவமான தொழில். கை நிறைய சம்பளம் தினம் தினம் ஏதாவது புதுப் புது உத்திகளால் ஆனந்தம் கிடைக்குமா? கனவு பலிக்குமா?

ஆச்சர்யமாக இருந்தது, கோபி வந்திருந்தான். என் கல்லூரித் தோழன் கண்டியில் அவனது வீட்டில்தான் இருவரும் தங்கிப்படித்தோம். பரீட்சைமுடிந்து இருமாதங்களுக்கு பிறகு இன்று தான் காண்கிறேன். யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி போய் வருகையில் என் வீட்டில் இறங்கி விசாரித்தானாம். நான் மதவாச்சியில் இருக்கிறேன் என்றறிந்து, முகவரி தேடிவந்திருந்தான்.

மகிழ்ச்சியாக நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தோம். பழைய சம்பவங்கள்...... ஜோக்குகள்... ரெக்கிங் அனுபவங்கள் ...... வாத்திமார்களுக்கு தண்ணி காட்டிய நகைச்சுவைகள்......

''கோகிலா! நல்ல கேஸட் பீஸ் ஒன்று கொண்டுவந்தநான். கேக்குறியளே...? S.P.B. யின்ற புது ஸோங்ஸ்......''

★★ ★ ★ ★ ★ ★ ★

★ ★ ★ ★ ★ ★ ★★

''கேப்பமே... அதுக்கென்ன...'' அவனைக் கூட்டிக்கொண்டு நடுக் கூடத்துக்கு வந்தேன். உட்காரச் சொன்னேன். கேஸட்பீசை வாங்கி, கேஸட்டினுள் உட்செலுத்தி, ப்ளே பண்ணினேன். இனிய இசையின் மிருதுவான தவழல்! தொடர்ந்து S.P.B.யின் பரவசக்குரல்......!

தென் மதுரை வைகை நதி
தினம் பாடும் தமிழ்ப் பாட்டு
தேய்கின்றது பொன்மாலை நிலா
தேயாதது நம் ஆசை நிலா...

கோபி கண்மூடி ரசிக்கத்தொடங்கி விட்டான். அவன் ஒரு தமிழ்ப்பித்தன். கலை, இலக்கியம், கவிதை அது... இது என்று ரொம்பவும் பேசுவான் எனக்கு இதிலெல்லாம் துளி இன்ட்ரஸ்ட்டும் கிடையாது. வெறுமனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொல்லுகிறானே என்று கேட்டுக்கொண்டிருப்பேன். இப்போதும் கூட இந்த இசையையும், இந்தக் கனிவு பொங்கும் மதுரக் குரலையும்தான் ரசித்துக்கொண்டிருந்தேனே தவிர பாடலின் உட்கருத்தையல்ல...

''மதுரையில தமிழ் வளர்த்த மதுரையில உள்ள வைகைநதி கூட தினம் தினம் தமிழ்ப்பாட்டைத்தான் பாடுதாம். கவிஞர் சொல்றார்... விளங்குதா...?' அவனது பேச்சு இசையில் மயங்கித் தெளிந்திருந்தது.

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் ''ஓ! ஃபன்டாஸ்டிக்...'' என்று சுருக்கமாக, நான் சொல்ல, என் அதிஷ்டமோ, கோபியின் துரதிர்ஷ்டமோ அடுத்த வீட்டில் ருத்ரதாண்டவம் அக்கணத்தில் தொடங்கிவிட்டிருந்தது காதைக் கிழித்தது அந்த அம்மாளின் குரல்...!

''நாசமாப் போவாங்கள்...! ஏண்ட கிளிய சாவடிச்சவன் வெளங்குவானா? நாசமாத்தான் போவான்... பாவி... என்ன மனசு வந்து அதக் கொண்டானோ?''
எனக்கு தர்ம சங்கடம். கோவியின் மோனமும் சட்டெனக் கலைந்தது. நான் எழுந்து சென்று கேஸட்டை நிறுத்தினேன்.

''கோபி! இந்த பீஸ் எனக்கிட்ட இருக்கட்டும். நா கேட்டுட்டு அனுப்புறேன். நீங்க ஒன்டும் நெனக்காதீங்க. எங்கட நெய்பர்ஸ் இப்பிடித்தான். அன் எட்யுகேட்டட்...... கன்ட்ரிப் ரூட்ஸ்...''

அடுத்த வீட்டு ஜன்னலருகே மூத்த பெண் சரளா நின்றிருப்பது தெரிந்தது. ஆச்சர்யத்தோடும், ஏதோ காணக்கூடாததைக் கண்டுவிட்ட வியப்போடும். நம்மிருவரையும் வாய் திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். நான் கண்டதும் புன்னகைத்தாள்.

என் முழுக்கோபமும் அவள் மீது திரும்ப, படீரென்று ஜன்னலை இழுத்து மூடினேன்.

சென்ற ஆகஸ்டில் உ/த பரீட்சையை முடித்துவிட்டு, இரண்டு மாதங்கள் வீட்டோடு இருந்த நான் அக்கா வீடுபோய் சில நாட்கள் இருந்து வந்தால் என்ன என்று யோசித்துக்கொண்டிருக்கையில்தான் அவளிடமிருந்தே கடிதம் வந்திருந்தது.

அத்தான் தூர இடத்துக்கு மாற்றலாகிவிட்டார் என்றும், வார இறுதி நாட்களில் மட்டும் தான் வீடுவருகிறார் என்றும் எழுதியிருந்தாள் அவள் தனியே இருக்கிறாள் என்பதை எனக்கு இன்னும் அனுகூலமாகி விட்டது. புறப்பட்டு வந்துவிட்டேன். ஏறக்குறைய ஒரு மாதமாகிவிட்டது. இவ்வளவு நீண்ட நாட்கள் இங்கு தான் தங்கியது இது தான் முதல் முறை.

அக்காவுக்கு சமையலில் உதவி செய்வேன். துணி துவைத்து, அருணைக் கவனித்து, வீடு முற்றம் கூட்டி... இப்படி ஏதாவது வேலைகளை விருப்பத்தோடு செய்து கொடுப்பேன். சில வேளைகளில் இருவரும் சேர்ந்து மாலை நேரங்களில் பட்சணங்கள் செய்வதுமுண்டு.

ஓய்வாக இருக்கையில் ஒரு குமுதத்தைக் கையில் எடுத்துவிட்டால் போதும். அடுத்த வீடு பேசத்தொடங்கிவிடும். ஆசைக்கு ஒரு நல்லபாட்டா... டி.வி. யில் ஒரு நாடகமா... ஏன் அருணோடு கொஞ்சிவிளையாட ஆசைப்பட்டாலோ கூட முடியாமல் போய்விடும் செவிப்பறை வெடித்துவிடுமோ என்று பயம் வரும். ஆரம்பத்திலேயே மனம் இப்படி சலித்துவிட்டால், பிறகு எனக்கு எதிலும் நாட்டம் இல்லாதபடி ஆகிவிடும் அப்படி ஒரு விசேஷமான பிரகிருதி நான்.

இதில் பெரிய சிக்கல் என்னவென்றால், நம் வீட்டு நடுக்கூடம்தான் எனக்கு வாய்ப்பான இடம் டி.வியும், கேஸட்டும் இங்குதான் உள்ளன. பிரகாசமான இடப்பரப்பு. இதற்கு நேரேயுள்ள அடுத்த வீட்டு அறையில் தான் ராக ஆலாபனைகள் உச்ச ஸ்தாதியியில் நடக்கும். இரண்டுவீட்டிலும் நேராக ஜன்னல் இருப்பது மிகப்பெரிய சங்கடம்.

இங்கு நான் வந்த அடுத்த நாளே ஒரு மத்தியான வெயில் வேளையில், அடுத்தவீட்டு ரவீந்திரன் அவனது மூத்த தங்கை சரளாவைப் போட்டு மொத்து மொத்தென்று மொத்த, அவள் கிணற்றில் விழுகிறேன் பேர்வழி என்று திடுதிடுவென ஓட... ஓரே ரகளை ஊரே கூடிநின்று வேடிக்கை பார்த்தது.

வீட்டைச்சுற்றி ஓடிய அவளைத் தொடர்ந்து கதறிக்கொண்டே ஓடிய தனது தங்கைகளைப் பாய்ந்து அறைந்து விட்டு மீண்டும் அவளை மூச்சிரைக்க அடித்து அவள் மயங்கி வீழ்ந்ததும், அழுதுகொண்டிருந்த தன் தாயைப் பார்த்து கர்ஜித்தான் அவன்.

''சொலிட்டேம்மா...... இது தான் மொதலும் கடைசியும் கண்டவனோட எல்லாம் இவளுகள் நின்டு ஆட்டம் போடுறத கண்டேனோ... இனி நா இந்த வூட்டுல இருக்க மாட்டேன்... ஓ...!''

எதற்காக அவன் இத்தனை ஆர்ப்பாட்டம் பண்ணுகிறான் என்று புரியவில்லை. அக்காவைக்கேட்டபோது சொன்னாள் சரளா தனது முன்னாள் வகுப்புத் தோழன் ஒருவனோடு தற்செயலாக நின்று பேசிக்கொண்டிருந்தாளாம். அதற்குத்தான் இதெல்லாம்...

எனக்குத் தாளாத அதிர்ச்சி. இந்தச் சின்ன விஷயத்துக்குக் கூட ஒருவன் இப்படிப் போட்டு ஒரு பெண்ணை அடிப்பானா?

அடுத்தவீடு என்கிற ரீதியில் அந்த சமவயதுப் பெண்களோடு கொஞ்சம் பேசிச்சிரிக்கலாம் என்று முதல் நாள் நான் நினைத்திருந்து கூட அத்தோடு முடிந்து விட்டது. நான் கதைக்கப் போய் அதுவேறு ஏடாகூடமாகப் போய் விடுமோ என்று உள்ளுணர்வு பயமுறுத்திற்று.

அயல்வீடே ஆனாலும், எந்த விதத் தொடுசலோ... ஏன் இதமான - நகைச் சுவையான - உரையாடலோடு கூட அனாவசியமாக வைத்துக்கொள்ளாத என் அக்காவின் போக்கு எப்போதும் எனக்குப் பிடிக்கும். இந்த நாகரீகங்கள் - மரபுகள்- எல்லாம் நமது சுயமரியாதையையும் கௌரவத்தையும் காப்பாற்றி, அதை மற்றோரிடம் வலியுறுத்தும் சக்தியுள்ளன என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பது என் கருத்து ஆனாலும் கூட அந்தச் சம்பவத்தின்போது...... அநியாயமாக அந்தக் கன்னிப் பெண் உடம்பு முழுக்க அடி வாங்கியபோது...... ஏனோ அதைத் தடுக்க என் அக்கா முன் சென்றிருக்க வேண்டும் என்று எனக்குப் பட்டது. அக்கா மட்டுமல்ல வேறு ஒருவர்கூட அந்த மனிதனின் அட்டகாசத்தைக் கண்டிக்க முன்வராதது ஏன் என்று இன்றுவரை எனக்குப் புரியவில்லை.

கோபி வந்த அன்று. அந்த அம்மாள் ஏன் அப்படிக் கத்தினாள் என்று அக்காவிடம் விசாரித்தபோது அவள் சொன்னது எனக்குச் சிரிப்பை மூட்டிவிட்டது. அந்த அம்மாள் ஆசையாக ஒரு கிளி வளர்த்தாளாம். அவர்கள் வெளியே சென்றிருந்தபோது யாரோ அதைக்கோரமாகக் கொன்று போட்டுவிட்டார்களாம்.

ஓ! இப்படியெல்லாம் கூட இவர்களிடம் ஆசைகள், பாசங்கள் உண்டா?

ஏன் அவர்களும் மனிதர்கள் தானே...? நம்மைப் போலவே செல்லப்பிராணி வளர்க்கவும், அன்பு கொண்டாடவும் அவர்களுக்கு உரிமையில்லையா என்று அப்புறம் தோன்றிற்று.

சிலவேளைகளில் ரொம்ப சிரிப்பும் கலகலப்புமாக அவர்களது பொழுது கழிவதுண்டு. அந்நேரங்களில் அநேகமாக ரவீந்திரன் இருக்கமாட்டான் என்பது நிச்சயம். தந்தை இல்லாத குடும்பத்தின் மூத்த மகனான அவன் தான், அக்குடும்பத்தின் ஆதாரம். முன்புறம் சின்னதாக ஒரு ஹோட்டல் நடத்துகிறான். அதற்குத் தேவையான அத்தனை உணவும், அந்தப் பெண்களால் வீட்டிலேயே தயாரிக்கப்படும். ரொம்ப சுறுசுறுப்பான பெண்கள் அவன் இல்லாவிட்டால் அம்மா கடையைக் கவனிக்க இந்த மூன்று பெண்களும் கலீர் கலீரென்று சிரித்தபடியே ஏதேதோ பேசியபடி வேலை செய்துகொண்டிருப்பார்கள். சிட்டுக்கள் போல் ஜன்னலுக்கு அப்புறம், இப்புறம் இவர்கள் திரிவது தெரியும்.

எனக்குள் ஒருவித பிரீதி தோன்றி மனதை நிறைத்து விடும் இந்த ஆனந்தம் நிலைக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். ஆனால், அவர்களது குரல் மீண்டும் வழக்கம்போல உச்ச ஸ்தாயியை நெருங்கிவிடும்போது எரிச்சல் மண்டிக்கொண்டுவரும். 'என்ன இது ஆம்புளைத்தனம்' என்று எனக்குள் கோபப்படுவேன்.

மெல்லிய மாலை வெயில் பூமியைத் தழுவியிருந்தது. அக்கா கடைத்தெருவுக்குப் போயிருந்தாள் அருணை தூக்கிக் கொண்டு கொல்லைப்புறம் நின்றிருந்தேன்.

பெரிய அதிசயம்! இரண்டு சிறு பெண்களும் சில்கோடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். சரளா ஈரிசி அரித்துக்கொண்டிருந்தாள்.

பேசிப்பார்க்கலாமா என்று தோன்றிற்று. ஈகோ விடவில்லை.

இளையவள் என்னைக் கண்டு முகம் மலர சிரித்தாள். மெல்லிசாய் சிரித்துவைத்தேன். அதற்குள் அருண் அங்கே போகவேண்டுமென்பது கையைக்காட்ட, நான் போக வேண்டியதாயிற்று. இளையவளே முதலில் சொன்னாள்.

''அம்மாவும் அண்ணாவும் வெளியே போயிருக்காங்க. அதான் கடைய மூடிட்டோம். ...''
மற்றவள் சொன்னாள்; ''அது தான் இப்ப சந்தோஷமா இருக்கோம்...''
நான் அடக்கமாட்டாமல் சிரித்தேன். ''அப்ப வூட்டுல ஒருத்தரும் இல்லாட்டிதான் ஒங்களுக்கு சந்தோஷமா...?''
இப்போது சரளா எழுந்து நம்மருகே வந்தாள். கையில் ஒட்டி இருந்த ஈரமான அரிசிகளை நக்கித் தின்றுகொண்டிருந்தாள். இளையவள் மீண்டும் கேட்டாள். அக்கா... நீங்க லீவுலயா வந்திருக்கீங்க...?''
தலையசைத்துவிட்டு சிறுதயக்கத்துடன் கேட்டேன்.

''நீங்க ஒருத்தரும் படிக்கல்லியா.. ?''
மற்றவள் கம்மிய குரலில் சொன்னாள்; அக்கா ஒன்பது. நாங்க ரெண்டுபேரும் ஐஞ்சாம் வகுப்பு. அதோட நிப்பாட்டிட்டாங்க...?'
சோகமானதொரு மௌனம் முகத்தில படிய, தூர எங்கோ பார்த்துக் கொண்டிருந்தாள் சிறிது நேரம். எனக்கு வருத்தமாக இருந்தது ஏன் கேட்டோம்..?
சட்டென அவள் கேட்டாள்.
''அக்கா அன்டக்கி வந்தவரு யாரு...?''
ஓ! இவள் கோபியைக் கேட்கிறாள்.
இவளுக்கு என்ன தேவையாம். சுரீரென்றிருந்தது எனக்கு. நறுக்குத் தெறித்தாற் போல் சொன்னேன்.
''என்ட கிளாஸ்மேட் அவர்''
இந்தப் பெண்களுக்கு அவன் மேல் ஏன் நோட்டம் என்று எனக்கு எரிச்சலாக இருந்தது. ஏதாவது கேட்டு இவர்களைக் காயப்படுத்த வேண்டும்போல் சடுதியான ஒரு உந்துதல்.

''அது சரி ஒங்கட வூட்டில ஏன் அப்புடி ஒரே சத்தம் எந்த நேரமும்?'' கேட்டுவிட்டேன்.
மீண்டும் அவள் முகம் சுருங்கி விட்டது. ''ஒங்களுக்கெல்லாம் சரியான கஷ்டமா இருக்கும் இல்லியா...?''
சரளா சொன்னாள்.
''இல்லாம இருக்குமா? வாழ்றதுன்டா, எல்லாருக்கும் கஷ்டம் தான்...'' வயது முதிர்ந்த ஒரு பாட்டிபோல் சொன்ன அவளை நேராகப் பார்த்தேன்.

அவள் இயல்பாகச் சொன்னாள்.

''ஒங்களுக்கெல்லாம் கஷ்டமாத்தான் இருக்கும். என்னடா இப்புடி கத்தித்தொலைக்குதுகள் என்டு எரிச்சலாத்தான் இருக்கும். நீங்க வசதியுள்ளவங்க. அத அனுபவிக்க அமைதியைத் தேடுறீங்க வசதியுள்ள எடத்துல அமைதி தானாகவே வரும். நாகரீகம் இருக்கும்... ''நாங்க இன்னம் அடிமட்டத்துலயே இருக்கோம். இந்த மட்டத்த வுட்டு எப்புடியாவது மேல போயிட முடியாதான்றா தவிக்கிறோம். அதுக்காகப் போராடுறோம். அத ஒங்களால சகிக்க முடியாமதான் இருக்கும் என்டு கேட்டா, நீங்க வெளயாடவும், டி.வி பாக்கவும் அமைதியைத் தேடுறீங்க... நாங்க அப்புடியில்ல. அன்டன்டைக்கி திங்க சோறு கெடைக்குமான்டுறதுதான் எங்கட கவல ஒருவயித்து சோத்

(27ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசனைக் கண்டேன்

ஈழத்துச் சிவானந்தன்



கவிஞர் கண்ணதாசன்

## 2

## நீ..... தி. மு. க, காரனா?

படுக்கையாய்க் கிடந்த அன்னை பயணமானார். பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவுடைய பரமன் பக்கத்து வீட்டில் இருந்துகொண்டு என்னைத் தாயாய்ப்புரந்து உருவாக்கிய தாய்மாமனார் அதிபர் செல்லத்துரையாரின் மனைவி மூலம்தண்ணளி செய்தான். நான் பிறந்து மூன்று வயதானதும் அவர்களுக்குச் சுவீகார புத்திரனானவன். குழந்தைகள் இல்லாததால் அவர்கள் என்னை பிள்ளையாக்கிக்கொண்டார்கள்.

கண்ணதாசன் மேட ராசிக்காரர். நானும் மேட ராசிக்காரனே. செட்டி நாட்டில் அவரும் யாராலோ சுவீகாரபுத்திரனாய் எடுக்கப்பட்டதாக எழுதியிருந்தார். தாய்மாமனாரின் மனைவியை மாமி என்றுதான் கூப்பிடுவேன். அதற்குள் 'அம்மா' என்ற பொருளிருக்கும். அத்தையும் அம்மாவாகலாம் என்பதற்கு அவர்களுடைய குணாம்சங்கள் சான்றாகின. எங்கள் குடும்பத்தில் அவர்கள், எல்லாராலுமே தாயாக எண்ணப்பட்டு மதிக்கப்பட்டவர்கள். சோறு கொடுப்பதுதான் அவரது சோராத கடமை. அந்தக்காலத்தில் எங்களுருக்குவரும் எந்தப்பிரமுகரும் அவரிடம் சாப்பிடாமற்போனதில்லை, தெய்வத்தாயான அவர்களுக்கு முன்னால் எந்தத்தறுதலையும் தலை சாய்ப்பான்.

நான் இளம் வயதில் புகைபிடிக்கும் பழக்கமுடையவன். மாமித்தாய்வருகிறாரென்றால் அதனை எறிந்துவிட்டுநிற்பேன். அவர்கள் மணத்தில் நான் என்னசெய்தேன் என்பதை தெரிந்து விடுவார்கள். ''எனக்கு மரியாதைவேண்டாம். உன் உடம்பைக் கெடுக்காதே'' என்று சொல்லிக்கொண்டே நகர்ந்து போவார்கள். அவர்கள் இல்லையேல் நான் இந்தியாவுக்குப் போயிருக்க முடியாது. மாமனார் என் விடயத்தை மறந்துபோகாமல்; நினைவூட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

எனது பயண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தபோது அருள் நெறித்திருக்கூட்ட அமைப்பிற்காகவும் திருநெறிய தெய்வத் தமிழ்ச் சேவைக்காகவும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் இலங்கைக்கு வந்தார். அவர்களோடு என்னையும் சேர்த்துக் கொண்டு வட்டுக்கோட்டை முதலியார் சின்னத்தம்பி அவர்கள் மலைநாடு உட்பட இலங்கை பூராவும் உள்ள பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்றார்கள். அடிகளாரோடு நானும் பேசினேன். போகும் இடங்களில் என் பேச்சோடு கண்ணதாசன் கருத்துக்களையும் கலந்து பேசுவேன்,

''போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்தூற்றுபவர் தூற்றிட்டும் ஏற்றதொரு கருத்தை என் உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன் எவர் வரினும் நில்லேன் அஞ்சேன் தொடர்ந்து செல்வேன்'' என்ற கவிஞரின் வரிகளில் உள்ள ஏற்றதொரு கருத்தை என்னும் வாக்கியத்தை ஏற்றதொரு நற்கருத்தை என்று மாற்றிக் கூறுவேன், கண்ணதாசனைக் கேட்டா இந்தமாற்றத்தைக் செய்தீர்கள் என்று — அடிகளார் கேட்பார், நான் அவரை இன்னும் காணவில்லைச் சுவாமி, கண்டு சிலவற்றை அவரோடு பேசவேண்டும் என்பேன். நல்லது. நீங்கள் ஒரு முறை தமிழ் நாட்டுக்கு வாருங்கள். எனக் கதையோடு கதையாகச்சொன்னார்கள்,

''குன்றக்குடிப் பெரியீர் குமரனுக்கும் தமிழ் தருவீர்'' என்று கவிஞர் மதுரை எழுத்தாளர் மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக் கவியரங்கில் பாடிய வரிகளையும் ஈழத்து மேடைகளில் அடிகளார் முன்னிலையில் கூறினேன். யாழ்ப்பாணம் வந்த அடிகளார் எங்களுருக்கும் வருகை தந்தார். இளைஞர் கழக நண்பர்களோடு அடிகளாரை வரவேற்று உரையாற்ற ஒழுங்குகள் செய்திருந்தேன். ஆலயங்களில் திருமுறைத் தமிழ் அர்ச்சனைகளும் நடைபெற்றன. அடிகளார் பாதையிலே...! என்னும் எனது சொற்பொழிவு நூல் ஒன்றும் வெளியிடப்பட்டது. இவை குறித்து அண்மையில் கனடாவில் வெளியிடப்பட்ட மலர் ஒன்றில் சட்டத்தரணி எஸ்கே மகேந்திரன் அவர்கள் விதந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

எங்கள் வீட்டிற்குவந்து தந்தையாரோடு சைவ சித்தாந்தம் குறித்து உரையாடிவிட்டுப் புறப்பட்ட அடிகளார் உங்கள் மகனை தமிழ்நாட்டிற்கு அனுப்புங்கள் என்று கூறிவிட்டும் சென்றார்.

திருவருளாலும் குருவருளாலும் எனது பயணம் உறுதியானது. மன்னார் மார்க்கமாக தனுஸ்கோடிக்குச் சென்று புகையிரதம் மூலம் திருச்சியை அடைந்தேன். திருச்சியிலிருந்து சிதம்பரம் போகவேண்டும். இரவு பத்துமணி. சிதம்பரம் செல்லும் ரயில் திருச்சி ஜங்சனில் இருந்து புறப்பட இரவு ஒரு மணி செல்லும் என்றார்கள். இன்றுபோல் அன்று பஸ்வசதிகள் இல்லை. ரயிலில்தான் பிரயாணம் செய்யவேண்டும். நானும் ஊருக்குப் புதியவன். ரயில் புறப்படும்வரை ஸ்ரேஷனிலேயே இருந்தேன். நாளிதழ், கிழமையிதழ் நாவல்கள் முதலியவற்றைச் சுமந்துகொண்டு மூன்று சில்லுவண்டில் ஒன்று புகையிரத மேடையில் உருண்டது.

பலரும் பல இதழ்களை வாங்கிப்படித்தார்கள். கட்சிசார்பு, இயக்கச்சார்பு, கொள்கைச்சார்பு என்று பலதிறப்பட்ட வாசிப்புகள் இருக்கையில் இருந்தவர்களால் மேற்கொள்ளப்பட்டன. நான் எந்தச் சார்பாளனும் இல்லை. பத்திரிகைவண்டியில் கண்ணதாசனின் பத்திரிகை அல்லது குன்றக்குடி அடிகளாரின் பத்திரிகை ஏதாவது இருக்கிறதா என்று எட்டிப் பார்த்தேன். தென்றல் என்ற சஞ்சிகையை கண்ணதாசனும் தமிழகம் என்ற இதழை அடிகளாரும் நடத்திக்கொண்டிருந்தனர், 'தமிழ்' என்ற சென்னையில் நடந்த மாதஇதழுக்கும் அடிகளார் சிறப்பாசிரியராய் அன்று இருந்தார்.

நான் தேடிய பத்திரிகைகளில் தென்றல்மட்டும் இருந்தது. அதனை வாங்கிவாசிக்கத்தொடங்கினேன். எனக்குப் பக்கத்தில் இருந்தவர் என்னை முறைத்து ஒரு பார்வை பார்த்தார் சற்று நேரத்தில்... ஏப்பா? நீ... தி.மு.க. காரனா? என்று கேட்டார். தொனிப்பில் அவர் காங்கிரஸ் காரர்போல் தெரிந்தது. அப்பொழுது பக்தவத்சலனார் முதலமைச்சராயிருந்த காலம்.

''இல்லை ஐயா! நான் கவிஞருக்காக இந்த இதழை வாங்கினேன்'' என்றேன்.

''கவிஞரும் கத்தரிக்காயும். இவங்க நாட்டைக் குட்டிச் சுவராக்கிற நாத்திகப்பசங்க. ஜனங்களை கோயிலுக்கு போகாத. சாமி கும்பிடாத என்று கேக்கிறவங்க. பெரியார் என்று ஒருத்தரு. பிள்ளையாரை உடைப்பாராம்; பிராமணனை அடிப்பாராம். அண்ணா என்று ஒருத்தரு. ஒன்றே குலமாம் ஒருவனே தேவனாம். ஸ்ரீரங்கநாதனையும் தில்லைநடராஜனையும் பீரங்கி வைத்துப் பிளக்கப் போறாங்களாம். இவங்களுக்குப் பின்னாடி வெட்டிவா என்றால் கட்டிவரும் தம்பிகளாம், கலைஞராம் நாவலராம், சம்பத்தாம்... சண்டாளப்பசங்க. இவர் ஒரு கவிஞராம்; செட்டி நாட்டில திருநூத்துக் குடும்பத்தில பிறந்து தமிழ் நாட்டுத் தலையில மண் போட்டுக்கிட்டிருக்காரு. இவருக்குப் பின்னாடி காலேஜ் பையன்களும் போறாங்களாம்... நீயும் அப்படி ஒரு ஆளோ? உன்னைப்பாக்கிறப்போ எனக்குக் கடுப்பாயிருக்கு. இத்தினாடி பத்திரிகை இருக்க நீ என்னடான்னா தென்றல வாங்கிப் படிக்கிற. உருப்படுவியா?

நடுநிசி பன்னிரெண்டுமணி மனிதர் பொரிந்து தள்ளினார். நான் நடுங்கிப்போனேன்.

''ஐயா எனக்கு கவிஞர் தமிழில் ஒரு பற்று. அவர் எழுத்துக்களைப் படிப்பதோடுசரி. அவர் கட்சி காரியங்கள் எல்லாம் எனக்குப் புறம்பானவை. என்றேன்.''

''ஆமா! நீ எந்த ஜில்லாக்காரன்? உன்ரபேச்சே வித்தியாசமாயிருக்கே. நீ மலையாளமா? தமிழையே ஒரு மாதிரியாப் பேசுறியே 'ழ' 'ள' உச்சரிப்பே உனக்குச் சரியா வரமாட்டேங்குதே.''

''ஓமையா. நான் இலங்கைத்தமிழன். புதிதாய் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன் எங்களுக்கு ழ,ள உச்சரிப்பில் பிசிறு விழும்தான். ஆனால் எழுத்தில் எந்தப் பிழையும் இருக்காது. எங்கள் நாட்டுத் தமிழ்நாக்குகளுக்கு ழகர ளகர பேதங்கள் பிடிபடுவது கஸ்ரம் தான். ஆனால் எழுதும்போது ளகர வகைகள் முறையாய் வந்துவிழும் என்றேன்.''

''ஆமா! நீங்க சிலோனா! தம்பி நீங்க எங்க ஊர்க்காரர் என்னு நினைச்சிக்கிட்டு நீ நீ என்று பேசிப்பிட்டேன். மன்னிச்சிடுங்க.''

''பறுவாயில்லை நீங்கள் எனக்கு வயதில் மூத்தவர் தானே. இனத்தாலும் நாங்கள் ஒருவர்தானே. உங்கள் பேச்சு எதுவும் என்னைப்பாதிக்கவில்லை.''

''காப்பி சாப்பிடுவமா?''

வளரும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணும் கண்ணாடியும்

கவிஞர் அகளங்கன்.

" இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் போல நோய்கள் உண்டாக உண்டாக மருந்து வகைகளும் கண்டு பிடிக்கப் பட்டுக் கொண்டே வருகின்றன. என்றாவது ஒரு நாள் எல்லா நோய்களுக்கும் மருந்து கண்டு பிடிக்கப்பட்டு விடும் என்று எம்மால் முற்று முழுதாக நம்ப முடியவில்லை. அந்த அளவிற்குப் புதுப்புது நோய்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன.

முற்காலத்தில் இருந்த சில வைத்திய முறைகளை நினைத்துப் பார்த்தால், அந்த முறைகள் உண்மையோ, அன்றிக் கற்பனையோ, எதுவாயிருப்பினும் நடைமுறைச் சாத்தியமானதாக இருந்து விட்டால் எத்தகைய நிலையிலும் மருந்துவம் நோயை வென்று விரட்டி விடும் என்று உறுதியாக நம்பிவிடலாம்.

இராமாயண யுத்தத்தில் இந்திரஜித் எய்த பிரமாஸ்த்திரம் இராமரின் சேனைகள் அனைத்தையும் கொன்று விடுகின்றது.

இறந்தவர்ளை உயிர்ப்பிக்கும் சக்தி வாய்ந்த சஞ்சீவி என்ற பெயர் கொண்ட மருந்துச் செடிகள் அக காலத்தில் இருந்திருக்கின்றன. அந்த மூலிகைகளைக் கொண்டு வந்தால் இறந்தவர்கள் உயிர் பெற்று விடுவார்கள்'

அதனல் அனுமான் சஞ்சீவி மூலிகைகள் உள்ள ஒரு மலைக்குச் சென்றது. மூலிகைகளைத் தேடிக் காலங்கடத்தாமல் அந்த மலையையே பெயர்த்து வந்து இறந்தவர்களை உயிர்ப்பித்ததாக இராமாயணத்தில் ஒரு கதையுண்டு.

அனுமான் மூலிகைகளைத் தேடிக் காலங்கடத்தாமல் மலையையே தூக்கி வந்தது என்ற கூற்றிலிருந்து நாம் ஒன்றை அறியலாம். ஒரு குறித்த நேரத்தினுள் மட்டுந்தான் இறந்தவர்களை உயிர்ப்பிக்கலாம். என்பதுதான் அது.

அப்பிடி ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்தினுள்ளாவது இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியுமாயின் எவ்வளவு நல்லதாக இருக்கும். இந்த மூலிகை இன்று இல்லையே.

இதேபோல இந்த யுத்தத்திலே இந்திரஜித்தின் நாக பாசத்தின விஷத்தினல் இராமரின் சேனைகள் இறந்து விடுகின்றன கருடன் வானத்திலே வந்து நிழல் கொடுக்க விஷம் அகன்று எல்லோரும் உயிர் பெற்றெழுந்து விடுகின்றனர்.

இது விஷகடி வைத்தியத்தில் கருடன் வரவு என்ற ஒரு முறையாகும். கடும் விஷங் கொண்ட பாம்பினால் கடிக்கப்பட்டவர்களை. ஒரு வெளியான இடத்தில் கிடத்திவிட்டு விஷகடி வைத்தியர் மந்திரம் மூலம் கருடனை வரவழைப்பார். கருடனின் நிழல் மனிதனின் உடலில் பட்டதும் விஷம் அகன்று விடும். இந்தக் கருடனை அழைக்கும் முறை முற்காலத்தில் விஷவைத்தியத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது.

வடநாட்டிலிருந்து ஒரு துறவி தமிழ் நாட்டுக்கு வந்தார். ஒரு இடையன் இறந்து கிடப்பதையும், அவனைச் சூழ்ந்துசொண்டு பசுக்கள் நின்று அழுவதையும் கண்டார். தனது உடலை ஓரிடத்தில் கிடத்தி விட்டு கிடந்த இடையனின் உடலினுள் தன் உயிரைச் செலுத்தி எழுந்தார்.

இடையனின் பெயர் மூலன். வவடநாட்டுச் சாமியார் அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர். வடநாட்டுச் சாமியார் தமிழ் நாட்டு மூலனாக பசுக் கூட்டத்தைப் பட்டிக்குக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார். மீண்டும் தனது சொந்த உடலினுள் புகுவதற்காக வந்தார். ஆனால் அவரது உடலோ மிருகங்களினால் சிதைக்கப் பட்டிருந்தது.

தமிழனாகத் தன்னை இறைவன் மாற்றியது தன்னைத் தமிழாற் பாடிப் பரவுதற்கே என்றுநினைத்தார்.

" என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!

எனக் கூறி திருமந்திரத்தைப் பாடினர். அவரே திருமூலர். இந்தமுறையிலே கூடு விட்டுக் கூடுபாயும் வித்தை கற்பிக்கப்பட்டு விட்டால் இறந்த இளைஞர்களின் உடலில் முதியவர்கள் புகுந்து புதுவாழ்க்கை பெற்றுவிடலாமே.

யயாதி என்ற ஒரு அரசன் சுக்கிராச் சாரியாரின் மூப்பும் பிணியும் அடைந்தான், அவனது மூப்பையும், பிணியையும் அவனது பிள்ளைகளில் ஒருவர் பெற்றுக் கொண்டு தனது இளமையைத் தகப்பனுக்குக் கொடுக்கலாம் என்பது சாப விமோசனம்.

யயாதியின் இரண்டாவது மனைவியாகிய சன்மிஸ்டையின் புதல்வர்களில் ஒருவனான பூரு என்பவன் தனது இளமையைத் தந்தை யயாதிக்குக் கொடுத்து, யயாதியின் மூப்பையும் பிணியையும் பெற்றுக் கொண்டதாக மகாபாரதத்திலே ஒரு கதையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல"

என்ற வரிகள் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஒரு ஆழ்வாரின் பாசுரத்தில் வருகிறது. அந்தக் காலத்தில் கூரிய கத்தியால் வெட்டி பின் சுட்டு, மருத்துவஞ் செய்திருக்கிறார்கள். அதாவது இன்றைய அறுவைச் சிகிச்சை, கரண்ட் பிடித்தல், போல இருக்கிறது முற்கால முறைமை.

தமிழிலே வழங்கும் ஒரு பழமொழி "கையில் புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமோ" என்பது தெளிவாகிறது.

கையிலே தெட்டத் தெளிவாகத் தெரியும் புண்ணச் சோதிப்பதற்குக் கண்ணாடி தேவையில்லை. நேரடியாகவே பார்த்து புண்ணின் தன்மையை அறிந்து கொள்ளலாம், என்பது இதன் கருத்து.

தெட்டத் தெளிவாகத் தெரியாத புண்களைக் கண்ணாடி மூலம் பார்த்திருக்கிறார்கள்; என்பது இதன் மறை பொருள். இன்று எக்ஸ் கதிர்கள் (XRay) மூலம் படம் பிடித்து உடம்பினுள் உள்ள புண்களைக் கண்டு பிடிப்பது போல, இதைவிட மேலாக முற்காலத்தில் ஒரு கண்ணாடி மூலம் நேரடியாகக் கண்டு வத்தியஞ் செய்திருக்கவேண்டும் என்று எண்ணுவவது வியப்பானதாக இருக்கிறதா.

இல்லா விட்டால் இந்தப்பழ மொழியில் 'புண்' என்ற சொல் ஏன் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். கையிற் பழம் என்று கூறியிருக்கலாமே.

கையிற் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை என்பதிலிருந்து வேறு எங்கோ உள்ள புண்ணுக்குக் கண்ணாடி தேவை என்பது மறைமுகமாக விளங்குகிறதல்லவா.

இத்தகைய முறைகள் மருத்துவ விஞ்ஞானத்தில் கண்டு பிடிக்கப் பட்டு விட்டால் எவ்வளவு வசதியாக இருக்கும்.

சிறுவர் பாடல்

## சேவற் சண்டை

( வ. இராசையா )

சண்டை போட்டன ! - பெரும்
சண்டை போட்டன !
பாய்ந்து பாய்ந்து இரண்டு சேவல்
சண்டை போட்டன !

கத்தி இரண்டு வைத்துக் கொண்டு
சண்டை போட்டன !
காலில் ஈட்டி கட்டிக் கொண்டு
சண்டை போட்டன !

கொத்திக் கொத்திச் சிறகைப் பிய்த்துச்
சண்டை போட்டன !
கோபம் கொண்டு கொக்கரித்துச்
சண்டை போட்டன !

மெத்த மெத்த வேக மாகச்
சண்டை போட்டன !
மேலும் கீழும் புரண்டு விழுந்து
சண்டை போட்டன !

ஒன்றின் மேலே ஒன்று ஏறிச்
சண்டை போட்டன !
ஓய்ந்தி டாமல் சேவல் இரண்டும்
சண்டை போட்டன !

சண்டை போட்டன ! - சேவல்
சண்டை போட்டன !
புத்தி கெட்ட சேவல் இரண்டு
சண்டை போட்டன !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தம்பி தேடுகிறாய்....?

என்ன தம்பி தேடுகிறாய்...?
இசை எங்கிருந்து வருகுது...?
இசை எப்படித்தான் வருகுது.?
நீயும் நானும்
ஒரு ஜாதி தம்பி...
உன்னைப் போலவே...
நானும் பாமரன்......
இசை என்பது
வாத்தியமா...?
இல்லையே...
வாத்தியம் மட்டும்
இசை இல்லையே...
இசை என்பது
வாசிப்பவனா...?
இல்லையே...
வாசிப்பவன் மட்டும்
இசை இல்லையே!
பிறகு...?
காற்றின் காம்புகளில்
கசிவது இசை...
காற்றின் ஆன்மாவில்
கலப்பது இசை...
அப்படியே...?
ஆமாம்...
காற்றே இசை
இசையே காற்று
காற்றில்
இசை வசிக்கும்
இடம் எது...?
சொல்கிறேன்
உடம்பில் உயிர் வசிக்கும்
இடம் எது...?
மேகத்தில்
மழை வசிக்கும்
இடம் எது
பூவுக்குள்
வாசம் வசிக்கும்
இடம் எது...?
அதுதான் ..
அதுதான்
காற்றில் இசை
வாசிக்கும் இடம்...
இன்னொரு சந்தேசம்...
இந்த நாகசுரம்
எதில் செய்தது...?
தெரியவில்லை...

அந்நாளில் ..
மூங்கில் உத்தமம்.
வெண்கலம் மத்திமம்.
மற்றவை அதமம்...
இந்நாளில்...
நாற்காலி செய்யும்
கருங்காலி
நாகசுரத்துக்கும் பங்காளி...
இசையை ரசிக்க
என்ன தகுதி...?
சூனியமே தகுதி...
அறி..! மற...!
அதுதான் தகுதி...
குரல் துத்தம் கைக்கிளை
உழை. இளி. விளரி தாரம்
மறந்து போ...!
சுரஸ்தானம் சுதிபேதம்
தூக்கி எறி...!
பஞ்சமம் சட்ஜமம்
**அறியாதிருந்தால் உத்தமம்...!**
கிளியோபாட்ராவை
ஏற்றிவிட்டாலும்
எடைபார்க்கும் எந்திரம்
எடை மட்டுமே பார்க்கும்...
உலகை மற...
உயிரோடு மட்டும் இரு...
அதுவே தகுதி...
நான் நாகசுரம்
கற்க முடியுமா...?
முதலில்
நாகசுரத்திடம் கற்றுக்கொ
நாகசுரத்தின்
நதிமூலம் கேள்...
அதனை ஒரு நாள்...
அறிந்தது வாள்
அறுத்தது ரம்பம்
காய்ச்சியது வெயில்—
இழைத்தது உளி
சுட்டது நெருப்பு –
துளைத்தது இரும்பு!
இதன் பின்னும்
இளைத்த நாகசுரம்
இசைதான் சிந்தியது
கண்ணீரல்ல...
வாழ்க்கையும் அதுதான்
நெருப்புக்கு மத்தியில்

இளைப்பாறுவது
புயலுக்குப் பிறகு
பூப்பூப்பது...
நன்றி...
எல்லாம் சரி தம்பி
ஒன்று பிடிக்கவில்லை
உன்னிடம் எனக்கு...
என்னது...?
இசைக்கு -
தலை ஆடலாம்...
தலை வணங்கலாமோ...?

கவிஞர் வைரமுத்து

Nallur Branch Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15ம் பக்கத் தொடர்ச்சி...,

என்று இவளை நினைப்பது பேதைமையின்பாலதா கும்' என்பது அவன் வாதம்.

இனி இத்தகைய ஒரு விளக்கத்தை மதிநுட்பம் நூலோடு உடைய விசுவாமித்திரன் தந்துவிட்ட பிறத இது Case law என்ற சிறப்பைப் பெற்றுவிடு கிறதல்லவா? எனவேதான் இராமன் 'நீ ஏவினால் நின் உரை வேதம் எனக்கொடு செய்கைதான் எனக் குச் சிறப்புடைய வழியாகும் என்று பேசுவது அவன் தன்னுடைய விழுப்பொருளை மாற்றிக் கொண் டான் என்பதைக் காட்டுகிறது. தன்னலம் அல்லது அற்பப் பயன் கருதி அவன் தான் கொண்டிருந்த விழுப்பொருளை மாற்றிக்கொள்ளவில்லை. எனவே இதுவும் உலகிடை உண்டு என்பதைக் காட்டக் கம் பன் இப்போராட்டத்தையும் இராமனின் இந்த முடி வையும் நமக்குக் காட்டுகிறான்.

இவ்வாறு கூறும்பொழுதுகூட தென் சொற் கடற்கு எல்லை. தேர்ந்தவனாகிய இராமன், சொற் களை அளந்து போட்டுப் பேசுகிறான். 'இராமா இது செய்யலாமா?' என்று விசுவாமித்திரன் கேட் டிருந்தால் ஒருவேளை இராமன் 'இது தவறு என்று எனக்குப்படுகிறது முனிபுங்கவா!' என்று கூறி இருப் பான். அப்படி ஒரு நிலையை வைத்துக்கொள்ளா மல் அது செய்க என நீ ஏவினால்' என்று கூறிவிட் டமையின் இந்தச் செயலால விளையும் பாவபுண் ணியங்கட்கு நீயே பொறுப்பாளி ஆகிறாய் என்றும் இராமன் கூறிவிட்டான். குருவாகவும் தெய்வமாக வும் உள்ள ஒருவன் ஏவியதைச் செய்வதுதான் ஒரு வனுக்குத் தலையாய விழுப்மொருள் என்பதையும் இராமன் எடுத்துக் கூறிவிட்டான். தனி மனிதன் கொண்டுள்ள விழுப்பொருள்கூடத் தக்க காரணங் களால் மாற்றிக் கொள்ளப்படலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

இராமன் தன் விழுப்பொருளை மாற்றிக்கொண் டாலும் அவனுடைய நிழலாகவும், அணுக்கனாகவும் தொண்டனாகவும் உள்ள இலக்குவன் தான் கொண்ட விழுப்பொருளை மாற்றிக்கொள்ளத் தயாராக இல்லை. அயோமுகியைக் கொன்றுவிட்டாயா என்று இராமன் கேட்டதற்கு இலக்குவன் கூறும் இங்கிதம் நிறைந்த விடையைக் கண்டால் இவ்வுண்மை நன்கு விளங்கும். 'புன் தொழில் அனையவள், புகன்ற சிற்றத்தால் கொன்றிலைபோலுமால்? கூறுவாய் (அயோ - 90) என இராமன் கேட்டவுடன் இளையவன்

''துளைபடு மூக்கொடு செவி துமித்து உக,
வளை எயிள இதழொடு அரிந்து, மாற்றிய
அளவையில், பூசலிட்டு அரற்றினாள்' என
இளையவன் விளம்பி நின்று இருகை கூப்பினான்'
கம்பன் - 3631

கொல்லவில்லை; பெண் கொலை கூடாதகன்வி என்று வாயினால் கூறாமல் அவன் அரற்றினான் என்று கூறி வனங்கினான் அப்பெருமகன். இக் குறிப்பை அறிந்து கொண்டு சக்கரவத்தி திருமகன்

''தொன்இருள்' தனைக் கொலத் தொடர்கின்றா
-ளையும்.
கொல்லலை! நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ! மனு முதல் மரபினோய்! என...
(கம்பன் - 3632)

நீ மனு முதல் மரபின் வந்து அந்தப் பழமையசன அறத்தை காப்பவன் ஆதலின் பெண் கொலை செய் யவில்லை. நின்னை வாழ்த்துகிறேன் என்றான். இரா கவன் தான் தன் விழுப்பொருளை மாற்றிக்கொண் கொண்டது போல இளையலனும் மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நினைக்கவில்லை இதுவே அறத்தின் மூர்த்தியாகிய இராகவனுக்கு பெருமை.

இருவரும் அண்ணன் தம்பிகள்தாம் என்றாலும் இருவருடைய விழுப்பொருள்களும் மாறுபடுகின்றன! என்றாலும் என்ன? தான் கொண்ட விழுப்பொருள் அண்ணன் கொண்ட விழுப்பொருளிலும் மறுபட் டது. என்றாலும் அதை வெளிப்படையாகக் கூறி அண்ணன் மனம் . நோகுமாறு செய்ய இலக்குவன் விரும்பவில்லை. ஆனால் அதன் அருமைப்பாட்டை நன்குணர்ந்து கொண்ட இராகவன் 'மனுவின் மரபு கெடாமல் காக்கின்றவன் நீயே என்ற பெரியதொரு புகழ் மாலையைத் தம்பிக்குச் சூட்டி மகிழ்கின்றான் மாறுபட்ட கருத்துக்கு மதிப்பு தருவதே இருவருக் கும் ஒத்த விழுப் பொருள் போலும்!

இலக்குவனுடைய விழுப் பொருளுக்கு இப் பொழுது மரியாதைதந்து ஏற்றுக்கொள்ளும் இராமன் முன்னர் ஒரு நிலையில் இங்வாறு செய்யவில்லை தான் கூறினவுடன் இலக்குவன் அடங்கிவிடுவான் என்று தவறாக எடைபோட்டு விடுகிறான் இலக்கு வனுடைய உண்மையான ஸ்வரூபத்தை இங்குதான் இராமன் கண்கிறான். அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடற்தான் அயோமிகி நிகழ்ச்சியில் இராமன் தக்க வாறு நடந்துகொள்ள உதவிற்று போலும்.

பரதனுக்கு முடிவழங்க கைகேயி அரசனிடம் வரம் பெற்றுவிட்ட செய்தி இலக்குவன் காதில் விழுந்துவிட்டது, அந்த நேரத்தில் ராகவன் அவனு டன் இல்லை எனவே கொதித்து எழுகிறன் சுமித் திரை சிங்கம்.

''புவிப்பாவை பரம்கெட போரில் வந்தோரை
- எல்லாம்
அவிப்பானும், அவித்து அவர் ஆக்கயை
அண்டம் முற்றக்
குவிப்பானும், எனக்கு ஒரு கோவினைக்கொற்ற
மௌவி
கவிப்பானும் நின்றேன். இது காக்குநர் காமின்
(கபன் - 1722)

என்று கூவிக்கொண்டு நிற்கிறான். தேவரும் அஞ்சும் அந்த நிலையில் அவனிடம் சென்று பேச யாருக்குத் தைரியம் வரும்? இராகவன் இலக்குவனிடம் வந்து 'என் அத்த! ஏன்? நீ இமையோரை முனிந்திலா தாய் சன்னத்தன் ஆதித்தனு ஏந்துதற்கு ஏது? (கம் பன் 1727) என்கிறான்

இதற்கு இலக்குவன் கூறிய விடை நாம் நன்கு அறிந்த ஒன்றாகும். இராமன் என்ன கூறியும் இலக் குவன் சினம் அடங்குவதாகத் தெரியவில்லை. 'இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியின் பிழை' என்ற இராமனுக்கு 'விதிக்கும் விதியாகும் என்வில் தொழில் காண்டி என்று விடை கூறி விட்டான் இளையவன். இவ்வாறு இளையவன் கோபிக்கக் காரணம் யாது? 'வாய் தந்தன கூறுதியோ மறைதந்த நாவால்' என்று கூறியும் இலக்குவன் அடங்கவில்லை. இதற்கு மேல் ஒரு படிசென்ற இராமன் 'ஐய இவ்வையம் மையல் தோன்றா நெறி வாழ் துணைத்தம்பியைப் போர் தொலைத்ததோ? சான்றோர் புகழும் தனித்தாதையை வாகை கொண்டோ? ஈன்றாளை வென்றோ இனி இக் கதம் தீர்வது? என்று கூட இராமன் தன் துயரை வெளியிட்டான்.

இந்தப் பேச்சுக்கள் எதுவும் இலக்குவன் காதில் ஏற மறுத்துவிட்டன. காரணம் என்னவாக இருக்கும்? இராமனுடைய விழுப்பொருளும் இலக்குவனுடைய விழுப்பொருளும் முற்றிலுமாக மாறுபட்டு நிற்பதேயாகும். இராமனைப் பொறுத்தவரையில் அது அவனுக்குத் தாய், தந்தை சகோதரன் என்று பாகுபாடு உண்டு. முன்னர் உள்ள இருவரும் என்ன 'ஏவினாலும்' ஏன் என்று கேளாமல் உடனே கீழ்ப்படிய வேண்டும் என்ற கொள்கை உடையவன் அவன் உயிரினும் மேலாக மதிக்கின்ற விழுப்பொருள் அவ்வாறு கீழ்ப்படிதலே என்ற கொள்கைஉடையவன். அதனால் தான் கைகேயி 'அரசன் உன்னை வனஞ் செல்ல ஆணையிட்டுள்ளான்' என்று கூறினவுடன் மறு வார்த்தை பேசாமல் ''எந்தையே ஏவநீரே உரை செய இயைவது உண்டேல் உய்ந்தனன் அடியேனேன்'' என்றும் ''மன்னவன் பணி அன்றாகில் நும் பணி மறுப்பனோ? என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றது அன்றோ என்றும் கூறி விடை? யுங் கொண்டேன்' என்று புறப்படுகிறான். இராமனுடைய விழுப்பொருள் இவ்வாறு இருத்தலின் அவன் எதிர்பேசாது உடன் புறப்படச் சித்தமானதில் புதுமை இல்லை.

ஆனால் இளையபெருமாளைப் பொறுத்தமட்டில் நிலைமையே வேறு! அப்படியானால் அவனுக்குத் தாய் தந்தை என்ற மதிப்பு இல்லையா? நன்றாக உண்டு. தாய் தந்தையரை உயிரினும் மேலாக மதிக்கின்றவன்தான் இலக்குவனும். அப்படியானால் ஏன் இராமன் 'தந்தையை வாகை கொண்டோ? ஈன்றாளை வென்றோ இக்கதம் (கோபம்) தீர்வது?' என்று கேட்டபொழுதும் இலக்குவன் அது பற்றிக் கவலைப்படவில்லை. என்ற வினா நியாயமானதே! இதில் ஒரே ஒரு சிறு வேறுபாடுதான் உண்டு. அதனைப் புரிந்து கொள்ளாவிடின் விளைவது தவறேயாகும். இளையவனைப் பொறுத்தமட்டில், அவன் தாய் தந்தை, சகோதரர்கள் யார் தெரியுமா? இதோ அவனே இராமனிடம் பேசும்போது இந்த உண்மையைக் கூறுகிறான்.

'நல் தாதையும் நீ! தனிநாயகன் நீ; வயிற்றில் பெற்றாயும் நீயே பிறர் இல்லை'. (கம்பன் 1737)

இப்பொழுது புரிகிறதல்லவா? ஏன் இலக்குவன் தசரதனையும், கைகேயையும், பரதனையும் மதிக்கவில்லை என்று! அவனைப் பொறுத்தமட்டில் சுமித்திரை அவனைப் பெற்றவள் என்பதைக் கூட ஏற்க மறுத்து விட்டான்! 'வயிற்றில் பெற்றாயும் நீ' என்று ஆண்மகனாகிய இராமனைப் பார்த்துக் கூறியது கூட வியப்பில்லை. அடுத்து ஒரு சொல்லைப் போட்டானே அதுதான் சிறப்பு. வயிற்றில் பெற்றாயும் நீயே; பிறர் இல்லை' என்ற சொற்கள் இலக்குவனுடைய அந்தரங்கத்திலுள்ள விழுப்பொருள் யாது என்பதை நமக்கு காட்டிவிடுகிறது. ஒரு தாய் ஏவினதை ஏற்றுக்கொண்டான் இராமன்.

ஆனால் இலக்குவனைப் பொறுத்தமட்டில் இவர்கள் அனைவரும் அந்நியர்களே! அவன் தாய், தந்தை, தெய்வம் அனைவரும் இராமனே ஆதலின் அவன் தசரதனைப் போரிட்டுக் கொல்லத் துணிந்ததில் தவறு இல்லையல்லவா? இவர்கள் அந்நியர்களாக மாறிவிட்டது மட்டுமன்று; பகைவர்களாகவும் ஆகிவிட்டனர். ஏன்? அவன் தாயும் தந்தையுமாக உள்ள இராமனுக்குத் தீமை புரிகின்றவர்களை அவன் எவ்வாறு பார்த்துக் கொண்டுபொறுமையோடு இருக்கமுடியும்? எனவே தான் அவன் தெய்வமாகிய இராமனுக்குத் தீமை நினைந்து செய்யத் துணிந்தவர்களை அழிக்க முற்பட்டால் அதில் யார் தவறு காணமுடியும்? அவன் பகை என்று கருதுபவர்கள் துரதிஷ்டவசமாக இராமனுக்குத் தாயும் தந்தையுமாக இருந்துவிட்டனர். அது ஒரு தற்செயல் (accident) ஆதற்காக இளையவன் என்ன செய்ய முடியும்? அவன் விழுப்பொருள் என்று கருதும் இராமனுக்கு வரும் தீமையைத் தடுக்க முற்படுகிறான். எனவே அவனுடைய கோபம் தவறானது என்று கூற முடியாத நிலை. இதனை இராமனும் புரிந்துகொள்கிறான். அவன் எப்பொழுது புரிந்துகொண்டான்? 'பெற்றாயும் நீயே பிறரில்லை' என்று இலக்குவன் அடித்துப் பேசிய பொழுதுதான் இராமன் இலக்குவனையும் அவனுடைய விழுப்பொருள் யாது என்பதையும் புரிந்துகொண்டான்.

புரிந்துகொண்ட இராமன் மற்றொன்றையும் தெரிந்து கொண்டான். தான் கூறிய வாதங்களில் இலக்குவன் கட்டுப்படமாட்டான் என்பதையும் இவனை இப்படியே விட்டால் விளைவது தீமையே என்பதையும் நன்கு தெரிந்து கொண்டான. அப்படியானால் அடுத்து செய்யவேண்டியது யாது? இலக்குவன் எதனைத் தனது விழுப்பொருள் என்று கருதுகிறானோ, அதன் வழியே சென்றுதான் அவனை மடக்கவேண்டும் என்ற உணமை இராமனுக்கு நன்கு புலனாயிற்று. தனக்கு விழுப்பொருளாக உள்ள தாய் தந்தை, சோதரன் எனபவர்களைக் காக்கவேண்டுமானால் இலக்குவனை அடக்கவேண்டும். அவனை அடக்கவேண்டுமானல் அவனுடைய விழுப்பொருளுக்கு ஊறுநேராமல் அதன் வழியே சென்று அதனை முடிக்கவேண்டும். இந்த வழி தெரிந்தவுடன் இராமன் தான் இதுவரை பேசிய முறையை மாற்றிக் கொண்டு விட்டான். தசரதனையோ, பரதனையோ குறித்துப் பேசினால் இலக்குவன் கோபத்திற்கு எண்ணெய் ஊற்றியது போலாகிவிடும். ஆனால் அவர்களை விட்டுவிடவும் முடியாது இதற்கு வழி என்ன? இதோ அற்புதமான வழியைக் கண்டு பேசுகிறான். மூத்தவன் 'தம்பீ எனக்கு நல்ல அறிவுரைகளை அன்றாடம் கூறி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்த என் தந்தையின் கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைமீறி அரசை மறுபடியும் ஏற்பது எனக்குத்தக்க தன்று என்ற முடிவிற்கு நான் வந்துவிட்டேன். காரணம் என் விழுப்பொருள் அதுதான் உன்னைப் பொறுத்தமட்டில் உன் விழுப்பொருள் என் ஒருவனை மட்டுமே பொறுத்துள்ளது. அப்படியானால் உன்னால் தாய், தந்தை, தெய்வம் என்று வழிபடப்படுகின்ற என் சொல்லைத் தட்டி நடப்பது உனக்கு முறையா குமா? என் சொற்படி நடந்துகொண்டால் அதனால் உனக்கு ஏதேனும் ஊனம் உண்டாகுமென்று நினைக் கிறாயா? என்ற பொருளில்

'நன் சொற்கள் தந்து ஆண்டு, நாளும் எனை
வளர்த்த தாதை;
தன்சொல் கடந்து எற்கு அரசாள்வது தக்கது
அன்றால்;
என்சொல் கடந்தால், உனக்கு யாது உளது
ஊனம்? என்றான்—
தென்சொல் கடந்தான், வடசொற் கடலுக்கு
எல்லை தேர்ந்தான்'
(கம்பன் - 1741)

செல்லுஞ் சொல் வல்லவனாகிய இராமன் ஒரு சில சொற்களைக் கூறுவதன் மூலம் தேவரும் மூவரும் செய்யமுடியாத காரியத்தை செய்துவிட்டான். 'என் சொல்லைத் தட்டாமல் ஏற்றால் உனக்கு அதனால் என்ன இழுக்கு நேரப் போகிறது?' என்ற வினாவில் ஓர் ஆணையல்லவா அடக்கியிருக்கிறது. ஆம் இலக் குவனுடைய விழுப்பொருளுக்கு மதிப்புக் கொடுக்கும் முறையில் அவனை முற்றிலுமாக ஆட்படுத்தி விட் டான் இராமன்.

இதன் விளைவு என்ன தெரியுமா?

'சீற்றம் துறந்தான்; எதிர்நின்று தெரிந்து
செய்யும்
மாற்றம் துறந்தான்; மறை நான்கு என வாங்
-கல் செல்லா
நால் தெண்திரை வேலையின், நம்பிதன்
ஆணையாலே
ஏற்றம், தொடங்காக் கடலின் தணிவு எய்தி
நின்றான்'
(கம்பன் - 1742)

உடனடியாக இலக்குவன், கோபம் இருந்தவிடம் தெரியாமற் போய்விட்டது! வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லும் வகை மறந்துவிட்டது! அடங்கிய கடலைப்போல அடங்கிவிட்டான் தம்பி. ஆம்! அவ னுடைய விழுப்பொருளுக்கு (Values) அவனால் வணங்கப்படும் அண்ணனே இப்பொழுது மதிப்புக் கொடுத்துவிட்டான். இலக்குவன் விழுப்பொருள் என்று எதனை உயிரினும் மேலாகக் கொண்டிருந் தானோ அதற்கு மதிப்புக் கொடுப்பதன்மூலம் இரா மன் இலக்குவனை இன்னும் நெருக்கத்திற்குக் கொண் டுவந்து விட்டான் இலக்குவன் இராம அனுஜனாக ஆகிவிட்டான்; ஒவ்வொருவரும் தத்தம் விழுப் பொருளை விட்டுக்கொடுக்காமலே கூட உயிரினும் இனிய உறவுடன் இருக்கமுடியும் என்பதைக்கம்பன் காட்டும் இடமிது.

ஒரே மனிதனுடைய வாழ்க்கையில் புதிய நிகழ்ச்சி கள் அவனுடைய பழைய விழுப்பொருள்களைமாற்ற உதவியாக இருக்கலாம். அந்த நிகழ்ச்சிகளைக்கண்ட அல்லது கேட்ட அனைவருக்கும் அவை ஒரே மாதிரி யான எதிர் தாக்குதல்களைத் தரவேண்டும் என்று நினைக்கக்கூடாது. உதாரணமாகக் கற்பைப்பற்றித் தமிழர்கள் எவ்வளவு உயர்வாகவும் இன்றியமையாத சிறப்பினை உடையதாகவும் நினைக்கிறார்களோ அதே போன்ற நினைவுடையவர்தாம் மகாத்மா காந் தியும். நவகாளியில் நடை உலாச் செல்கையில் அடி களாருக்கு பல கடிதங்கள் வந்தன. இந்து முஸ்லிம் கலவரத்தில் கற்பழிக்கப்பட்ட சகோதரிகள் பலர் கருவுற்றுள்ளனர் என்றும் அவர்களை என்ன செய்ய லாம் என்றும் பலர் அடிகளாரைக் கேட்டிருந்தனர் காந்திஜி என்ன எழுதினார் தெரியுமா? ஆண்மை உடையவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்பவர் யாவரும் அந்தப் பெண்களை மணஞ்செய்துகொண்டு வாழவேண்டும் என்று எழுதினார். பெரிய சனாத னிகள் என்று பறைசாற்றிக்கொண்டு கள்ளவாழ்க்கை வாழும் போலிகள் சிலர் ஆகா! காந்தி இந்து தர் மத்தை அழித்துவிட்டார் என்று காட்டுக்கூச்சல் போட்டனர். ஆனால் அடிகளாரின் அடிப்படை விழுப்பொருளையே மாற்றக்கூடிய மாபெரும் கொடுமை நடந்துவிட்ட நிலைமையில் அடிகளார் தம் விழுப்பொருளை மாற்றிக் கொண் டார். இவ்வாறு மாற்றிக்கொண்டதும் அந்தக் குறிப் பிட்ட நிகழ்ச்சி நடந்த அந்த குறிப்பிட்ட கால எல்லைக்கு மட்டுமே பொருந்தும். இம் மாதிரியாக தற்காலிக மாற்றம் நிகழ்வதும் உண்டு. இதன் எதிராக, நடைபெற்ற நிகழ்ச்சி காரணமாக நிலையான விழுப்பொருள் மாற்றம் ஏற்படுவதும் உண்டு. நிலையான விழுப்பொருள் மாற்றம் ஏற்பட வேண்டுமானால் அதற்கு இரண்டு முக்கியமான சூழ்நிலைகள் வேண்டும். நிலையான விழுப்பொருளை அதுவரை கொண்டிருந்த ஒருவன் மாற வேண்டுமாயின் அவன் வளர்ச்சி அடைகிறான் என்பதையே அது குறிக்கும். அற்பசொற்ப ஊதி யங்கட்காகவோ, இலாபம் வருகிறது அல்லது வாழ்க்கையில் முன்னேறலாம் என்பதற்காகவோ, பட்டம்பதவிகட்காகவோ விழுப்பொருளை விட்டுக் கொடுப்பவன் சாதாரண மனிதன். இன்னும் கூற வேண்டுமாயின் சாதாரண மனிதனிலும் ஒருபடி தாழ்ந்தவன்.

இரண்டாவது சூழ்நிலை எதிரே நடைபெறும் நிகழ்ச்சியைப் பொறுத்தாகும். அற்பமான ஒன்றுக் காக விழுப்பொருளை மாற்றிக்கொள்வது கீழ்மகன் வேலை என்று கண்டோம். இதன் எதிராக மிக உயர்ந்த ஒன்றிற்காக வேறு பயன் ஒன்றையுங் கருதாமல் விழுப்பொருளை மாற்றிக் கொள்வதும் உண்டு. இது மிக அருகி நடைபெறும் ஒன்றாகும்' இதற்கும் கம்பனில் இடம் உண்டு

ஆதி காவியமாகிய வான்மீகத்திலும் வங்காள இராமாயணம் போன்றவற்றிலும் வாலி என்ற பாத்திரம் சாதாரணக் குரங்காகவே படைக்கப்பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுள்ளது. உலக இலக்கியம் எதிலும் காணப்படாத முறையில் கம்பநாடன் வாலியையும் அனுமனையும் படைத்துள்ளான். வாலியின் தவ வலி, கல்வி முதலியவற்றிற்கு ஈடு இணையே இல்லை என்னும்படி படைக்கப்பட்டுள்ளான். கதை அனைவருக்கும் தெரியுமாதலின் இதனை வளர்த்த வேண்டிய தேவை இல்லை. வாலிஇராமன் அம்பால் அடிபட்டு வீழ்ந்து கிடக்கின்றான். தன் மார்பையும் ஒருவனுடைய அம்பு துளைக்க முடியும் என்று அவன் கனவிலும் கருதினவன் அல்லன். எனவே மார்பைத் துளைத்துக் கொண்டு செல்ல முற்பட்ட இராமன் அம்பைத் தன் வாலாலும் காலாலும் பற்றி அது மேலே போகாமல் நிறுத்திவிட்டான். இராமன் அம்பை மேலே செல் லாமல் தடுத்து நிறுத்திய ஒரே பாத்திரம் இராமா யணம் முழுவதிலும் வாலி என்பவனேயாகும். வியப்பிலும், ஐயத்திலும் ஆழ்ந்துவிட்ட வாலி அந்த அம்பைத் தடுத்து நிறுத்தியதன் நோக்கம் அதை எய்தவன் யார் என்பதை அறிவதற்கேயாகும்.

அம்பில் பொறிக்கப்பெற்ற பெயர் இரண்டு எழுத்துக்களால் ஆயது. அதன் தன்மையைக் கூற வந்த கவிஞன் 'செம்மை சேர் நாமம்' என்று கூறு கிறான். அந்தப் பெயரைக் கண்டவுடன் வாலிக்கு ஆத்திரமோ சினமோ முதலில் தோன்றவில்லையாம். அதற்குப் பதிலாக வெட்கப்பட்டானாம், ஏன் தெரியுமா? சூரியகுலம் இராமன் பிறந்த காரணத்தால் நல்லறம் துறந்துவிட்டது என்றுதான் நாணம் அடைந்தான். தந்தை சொன்னான் என்பதற்காக வனத்திடை வந்தவன் கேவலம் என் பொருட்டால் வில் அறம் துறந்துவிட்டானே! என்று நினைத்தவுடன் சிரிப்பு வந்து விட்டதாம் வாலிக்கு. இவ்வாறு வாலி நினைக்கக் காரணம் யாது? சுத்த வீரனாகிய வாலி வீரத்தைப்பற்றிக் கொண்டிருந்த விழுப்பொருளின் அடிப்படையில் பிறந்தது இந்நகை! தூய வீரம் தேவையற்ற இடத்தில் போர் செய்யத் துணியாது: காரணமில்லாமல் ஒருவனைக் கொல்ல விரும்பாது. எல்லாவற்றையும் விட மறைந்து நின்று ஒருவன் மேல் சுத்த வீரன் அம்பு போட மாட்டான். இவை அனைத்தும் வாலியின் மனத்தில் தூய வீரம் பற்றிக் கொண்டிருந்த விழுப்பொருள்கள்.

இத்தகைய விழுப்பொருள்களை உயிரினும் மேலாக மதித்திருந்தான் வாலி. இந்த மனநிலையில் தான் இராமனைப் பற்றி அவன் எடைபோட்டிருந் தான். அவன் மனைவியாகிய தாரை, இராமன் சுக்ரீவனுக்குத் துணையாக வந்துள்ளான் என்று கூறியதைக் கேட்ட வாலி பெருங்கோபங் கொள் கிறான். ஏன் தெரியுமா? அவன் எவ்வெவற்றை உயிரினும் மேலான விழுப்பொருள்கள் என்று கருதி இருந்தானோ அவற்றைக் கொண்டே தசரதன் புத்திரனை எடைபோட்டிருந்தான். வாலி, தன் குறிக்கோளாக இருந்த விழுப்பொருள்களுக்கு நேரிய இலக்கணமாக உள்ளவன் இராமன் என்று எண்ணி யிருந்தான் வாலி. ஆதலால்தான் சுக்ரீவனுக்குத் துணையாக இராமன் வந்துள்ளான், என்று கூறிய தாரையை (வாலியின் மனைவி)ப் பெரிதுங் கோபி த்துக் கொண்டான் வாலி. அத்துணைத்தூரம் தன் விழுப்பொருளுக்கு ஒரு வடிவமாக அமைந்தவன் இராமன் என்று நினைத்திருந்த வாலிக்கு இப்பொழுது இராமன் அம்பைக் கண்டவுடன் பெருத்த இடி விழுந்தது போலாயிற்று. அவன் கருதுகோளாக இருந்த விழுப்பொருள் கீழே விழுந்து நொறுங்கி விட்டது.

எனவேதான் நாணத்தால் சிரித்துவிட்டான் வாலி. இராமன் பெயர் அம்பில் பொறித்திருந்தாலும் அதைப் பார்த்தவுடன் நம்பத் தயாராக இல்லை வாலி. தன் கண்களே தன்னை ஏமாற்றுகின்றனவோ என்றுகூட நினைத்து விட்டான். பலமுறை பார்க்கி றான். கண்ணால் கண்டதை மனம் நம்ப மறுக்கிறது! இந்த இக்கட்டைக் கவிஞன் அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறான். 'செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களால் தெரியக் கண்டான்' (வாலி — 79) என்பது கம்பன் வாக்கு. கண்களால் கண்டான் என்றாலே போதுமே. தெரியக் கண்டான் என்று வேறு கூறவேண்டுமா? ஆம் மனம் முதலில் ஏற்க மறுத்து இறுதியில் வேறு வழி இல்லாமல் ஏற்பதைத்தான் இவ்வாறு கவிஞன் பாடிக்காட்டு கிறான்.

*வளரும்*

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

துக்காக இப்புடி கஷ்டப்பட வேண்டியிருக்குதேன்டுதான் எங் களுக்கு வருத்தம். மனசு அப்புடி பாராம இருக்கக்குள்ள சின்ன விஷயத்துக்குக்கூட நாங்க எரிச் சல் படுறோம். சண்டை புடிக்கி றோம்... இந்த சத்தமும், சண் டையும்தான் எங்கட அடை யாளம். எங்கட வறுமையிட அடையாளம்...''

அவள் சொல்வதை வியப்புடன் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவள் பெரிய மனுஷிபோல் பேசு கிறாள்.

''ஒங்களப்போல நாங்க தொட ர்ந்து படிக்க நெனச்சாலும் அது நடந்திருக்காது. ஏன்டா, எங்கட நெலம அப்புடி. ஒங்களமாதிரி கூட்டாளிமார்கிட்ட வூட்ல வெச்சி பேசிட்டிருந்தா இங்க கொலதான் வுழும். எங்கட அண் ணன் அப்புடி. எப்புடியாவது ஒழுங்கா எங்கள கர சேத்துர ணுமேன்டு அவனுக்கு கவல தான். நெனச்சமாதிரி அழகா, கல்யாணம் கட்டி வாழக்கெ டைக்கல்லியேன்டு ஆத்திரம். அதனால தான் இப்புடியெல் லாம் நடக்குது. ஒங்கட பார் வையும், எங்கட பார்வையும் ஒன்டா இருக்காது. ஏண்டா... நாங்க ஏழைகள்...''

நிச்சிந்தையாய் அவள் இறைத்த வார்த்தைகளின் ஆழத்துள் நான் இறங்கிக்கொண்டிருக்கிறேன். எத்தனையோ கேள்விகள் நெஞ் சுள் குமிழியிட்டு சொப்பளிக் கின்றன. திணறி, முக்குளித்து, எழ முயன்றவளாய் ஒரு சின் னப் புன்னகையுடன் விடை பெற்று அருணைத் தூக்கிக் கொண்டு நடக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

## (VAARLLZKHAI)

உண்மை நேர்மை கடமை - இவையே வாழ்வின் தலைமை

குமிழ்-2 ஐப்பசி, கார்த்திகை-1992


## துளிகள்......! துளிகள்........!

பிராமண வம்சம் என்பதற்காக புலவரிடம் மதிப்புப் பெறமுடியாது பிராமண அம்சம்-குறிப்பாகக் குணாம் சம்உள்ளவர்களை மதிப்பதிலும் வணங்குவதிலும்முன் நிற்பவர் நான் சிறுப்பிள்ளையாய் இருந்த காலத்திலி ருந்தே அவருடைய நெறிமுறைகளாலும். தமிழ்ச் சுவையாலும் கவரப்பட்டவன்: ''வாழ்க்கை'' இத ழுக்குப் பொருத்தமானவரையே சிறப்பாசிரியராகப் போட்டிருக்கும் சிவகங்கா வெளியீட்டாரைப் பா ராட்டி; இவ்விதழ் நிலைத்து வாழ ஆசி கூறுகிறேன் .

- சிவ ஸ்ரீ சிவகுகக்குருக்கள்
( ஆசியுரையில் )

தமிழ்ப் பாரம்பரியக் குடும்பத்திலிருந்து வந்த புலவர் சிவானந்தனை சிறப்பாசிரியராகக் கொண்ட 'வாழ்க்கை' இதழ் வாழ்வின் எல்லா தளங்களையும் தொட்டு மக்கள் நல்வாழ்வுக்குப் பணிசெய்யும் என்று நம்பலாம்.

செ. குணரெத்தினம்
( தலைமையுரையில் )

இலங்கையில் கம்பர் கழகம் என்றால புலவரும் ஜெயராஜும் நினைவுக்கு வருவார்கள் இவர் பழை யவர். அவர் புதியவர் பழையதும் புதியதும் நம்மால் வரவேற்கப் படவேண்டியவை நமது வாழ்க்கைக்குப் புலவர் புதுநெறிகாட்டுவார். காட்டவேண்டும். வாழ் கை இதழ் இங்குள்ள ஏடுகளிலிருந்து வித்தியாசமா னதாய் விளங்குகின்றது. தமிழ் மக்கள் இவ்விதழுக்கு ஆதரவு வழங்கியாக வேண்டு :

ஆர் சிவகுருநாதன்.
வாழ்த்துரையில் )

( 'வாழ்க்கை 'இதழ் வெளியீட்டு விழாவில் சிந்தியவை )

- தர்மு -

Nallur Branch Library


## சிவகங்கா வெளியீடு

### SIVAGANGA PUBLICATONS

98,, விவேகானந்த மேடு,
கொழும்பு-13.

விவேகானந்தா மேடு 98,ம் இலக்கத்திலுள்ள சிவகங்கா வெளியீட்டினருக்கா வழக்கறிஞர் ப. கதிரவேலு J. P. U. M. அவர்களால் சங்கர் சன்ஸ் பிரின்டர்ஸ் 98, விவேகானந்தா மேடு. கொழும்பு-13ல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வையத்து நாட்டில் எல்லாம்
"வாழ்க்கை"
வளம்பெறுக!

# SAI RANJITH ENTERPRISE

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

17, Fourth Cross Street,
COLOMBO-11.
Telephone: 423171

'வாழ்க்கை'
இதழ் மலராகி
தமிழ் மணம் பரப்புக!

A. P. வடிவேலுப் பிள்ளை

அன்பளிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இன்புற்றிருக்கும் வாழ்க்கை அமைய

# "வாழ்க்கை"

இதழின் பணி வளர்க.
வாழ்த்துகின்றோம்!

Nallur Branch Library

## V. Manickam & Brother

General Rice Merchants & Commission Agents for Local Produce

## வ. மா. அன் சகோதரர்

**34, 4TH CROSS STREET,**
**COLOMBO-11.**

T'Grams:
"THAVAYOGA"

T'Phones:
23986 — 23408

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org